Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 கார்த்திகை-10 25-11-2004 வியாழக்கிழமை ஓசை -281

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-10705)



# மன்னாரில் தமிழீழதேசியக்கொடியை இராணுவம் அகற்றியதால் எழுந்த பதற்றம்!

## மக்களின் எதிர்ப்பிற்கு இராணுவம் பணிந்தது

(மன்னார்)

**மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் தமிழீழ தேசியக்கொடியை அகற்றியதையடுத்து பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதையடுத்து தள்ளாடி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி மன்னிப்புக் கோரியதுடன் தங்களால் அகற்றப்பட தமிழீழத் தேசியக் கொடியையும் திரும்பக்கொடுத்துள்ளனர்.**

மன்னாரில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மன்னார் நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அதேசமயம் மன்னார் பொதுவிளையாட்டரங்கில் மாவீரர் நினைவாக உதைபந்தாட்டம், மற்றும் பெண்களுக்கான கரப்பந்தாட்டம் போன்றன நடைபெற்றன.

இதன்போது நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

அந்தச் சமயம் பிற்பகல் 1.00 மணியளவில் இவ்விடத்திற்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மன்னார் நகர மண்டபத்திலும், மன்னார் பொது விளையாட்டரங்கிலும் ஏற்றப்பட்டிருந்த தமிழீழ தேசியக்கொடியினை அகற்ற முற்பட்டனர். இதன்போது மக்கள் கொடிக்கம்பத்தைச் சூழ்ந்து கட்டிப் பிடித்த வண்ணம் தேசியக்

(12ஆம் பக்கம் பார்க்க)



மன்னாரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தையும் பின்னர் இராணுவ அதிகாரி தமிழீழத்தேசியக்கொடியைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (மி)

## மக்களை அச்சுறுத்தி மாவீரர் நாள் நிகழ்வுளைக் குழப்ப இராணுவம் முயற்சி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை முனை கடற்கரைப்பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வை எழுச்சியோடு கொண்டாட ஏற்பாடுகள் செய்துவருகின்ற மக்களை மிரட்டி ஏற்பாடுகளைச் சீர்குலைக்க முயன்று வருகின்றன.

நேற்று முன்தினம் மதியம் 1.00 மணியளவில் அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்த முனைப் பகுதி மக்களை இராணுவம் மிரட்டியுள்ளதுடன் வர்ணக் கொடிகளையும் அறுத்தெறிதுள்ளனர். மது போதையில் இருந்த இவ் இராணுவத்தினர் அக்கிராமத்தில் புகுந்து பெண்களை தீய வார்த்தைகளால் தீட்டியும் மிரட்டியும் சென்றுள்ளனர். ஆனால் அம்மக்கள் தளர்ந்து போகாது மாவீரர் எழுச்சி நாளுக்கான அலங்காரங்களையும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடும் மழையையும் பொருட்படுத்தாது எழுச்சிநாள் ஏற்பாடுகளில் மக்கள்

அனைத்துப் பிரதேசங்களிலும் மாவீரர் எழுச்சி நாட்களை சிறப்புடன் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் நேற்றிரவு பூர்த்தியடைந்துள்ளன. கடும் மழையையும் பொருட்படுத்தாது பெரு மளவான மக்கள் மாவீரர்எழுச்சி நாள் ஏற்பாடுகளில் நேற்று முழுவதும் ஈடுபட்டுக் கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று காலை 8.00 மணிக்கு தேசியக்கொடி யேற்றலுடன் ஆரம்பமாகிறது.

பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், மாவீரர்திருவுருவப் படங்களுக்கு, ஈகச்சுடரேற்றல், மலர்வணக்கம், அகவணக்கம் உறுதியுரை எடுத்தல், நினைவுரை என்ற ஒழுங்கில், மூன்று நாட்களும் நிகழ்வுகள் இடம்பெறும் .

இதற்கென மாவீரர் துயிலுமில்லங்கள் ,அரச அரச, சார்பற்ற நிறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறு மூலையில் இருவர் துப்பாக்கிச்சூட்டிற்குப்பலி

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நேற்றிரவு இரண்டு குடும்பஸ்தர்கள் இனந்தெரியாத ஆயுதபாணிகளினால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் சண்முகம் தயாபரன் (வயது 32) என்பவர் சந்தை வீதியிலும், சண்பகநாதன் மனோகரன் (வயது 45) என்பவர் விஷ்ணு கோவில் வீதியில் வைத்தும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் முதலாவது நபர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் உறவினர்களால் வைத்திசாலைக்கு கொண்டு வரப்படும் வழியில் மரணமடைந்தார். வீடுகளிலிருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி அடிக்கல் நாட்டுவிழா

தமிழ் ஊடக அறிவியல் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நாளை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் காலை 10.00 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

## தேசியத் தலைவர் பிறந்ததினத்தில் "ஒளிக்கோலம்" வெளியீடு

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் 50ஆவது அகவை நிறைவையொட்டி நாளை விவரண "ஒளிக்கோலம்" ஒன்று வெளியிடப்படவுள்ளது.

தலைவர் அவர்கள் பிறந்த வல்வை மண்ணில் பிறந்ததின நிகழ்வில் இவ் ஒளிக்கோலம் வெளியிடப்படுகிறது என நிதர்சனம் (மகளிர்) நிறுவனத்தினர் அறியத் தருகின்றனர்.

## "வரலாறு தந்த வல்லமை" ஒலிப்பேழை இன்று வெளியீடு

"வரலாறு தந்த வல்லமை" ஒலிப்பேழை வெளியீட்டுவிழா இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைவாணர், கண்ணன் அவர்களின் இசையமைப்பில் இப்பாடல் ஒலிப்பேழை உருவாக்கப்பட்டுள்ளது.




## இராணுவத்தால் மாணவர்களுக்கு ஆபாசப்படங்கள் விநியோகம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம் திட்டம் தீட்டி பாடசாலை மாணவர்களுக்கு ஆபாசப்படச்சீடிக்கள் கட்டாயப்படுத்தி திணித்துக் கொண்டு வருகின்றது. சமுதாயம் அழிய வேண்டும் என்றும், எமது மக்களை அழிக்க வேண்டும் என்ற திட்டத்தோடு ஆபாசப்படங்களை ஒவ்வொரு பாடசாலை மாணவர்களுக்கும் கொடுத்து வருகின்றனர். இதனை திரைப்பட வெளியீட்டுப் பிரிவினர் ஆராய்ந்து கண்டுபிடித்து விசாரணைக்குட்படுத்தியபோது பல மாணவர்களிடம் இப்படம் இருப்பது தெரியவந்துள்ளது. எனவே இதை வைத்திருக்கும் வீடியோ நிலையங்கள், திரையரங்குகள் ஆகியன அவற்றைத் திரைப்பட வெளியீட்டுப் பிரிவில் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு வவுனியா மாவட்டத் திரைப்பட வெளியீட்டுப் பிரிவினர் கேட்டுள்ளனர். (10)

## கிளாலியில் கைதான மல்லாவி வாசிக்கு விளக்கமறியல்

யாழ் கிளாலியில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மல்லாவி யோகபுரத்தைச் சேர்ந்த ரி.நம்பிராசா என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். வீதிக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இவர் கொடிகாமம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சாவகச்சேரி நீதவானால் நீதிமன்றத்தில் நேற்று நம்பிராசா ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## இணைப்பு

வடமராட்சி கிழக்கு வேம்படி வாழ் மக்கள் வெளியிட்டுள்ள மாவீரர் நினைவு பிரசுரம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.



## மாவீரர் நாள் நவம்பர் -27

மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல; எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் திகழ்கிறது.

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## வரிவிளம்பரம்

மூத்த, முதன்மையான மாவீரர் களது கலர் படங்கள் விற்பனைக் தண்டு ஒரு தொகுதி 30/= சகல அறிவமுதிலும் பெற்றுக்கொள் ளலாம். (5304)

## பிணை அனுமதி

கடந்த6மாதகாலமாக சமுர்த்தி நிதியை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பின ருமான அலஹாஜ் அப்துல் காதர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன் றத்தினால் பிணையில் விடுவிக் கப்பட்டார்.

# சுங்க அதிகாரி கொலைவழக்கு மரணதண்டனை உறுதியாகியது

சுங்க அதிகாரி சுஜித் பிரசன்ன கொலை வழக்கின் பிரதிவாதிக ளுக்கான மரணதண்டனை நேற்று உயர்நீதிமன்றத்தால் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கின் பிரதிவாதிகளான துணை சுங்க அதிகாரி அனுர வீரவன்ச உட்பட்ட மூவருக்கு ஏற்கனவே மரண தண்டனை தீர்ப்புவழங்கப்பட்டது. இதனை அண்மையில் கொலை செய்யப்பட்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தலைமையிலான நீதிபதிகள் வழங்கியிருந்தனர் இந்த நிலையில் சரத் அம்பேபிட்டிய கொலை செய்யப்பட்டதும். சனாதிபதியினால் அமுல் செய்யப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றத்தின் பின்னர் மரணதண்டனை உறுதிப்படுத்தப்பட்டமுதல் வழக்கு இதுவாகும். என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# மாவீரர் எழுச்சி நாள்

### வடமராட்சி கிழக்கு

2004 மாவீரர் எழுச்சி நாளை முன்னிட்டு 25,26,27. ஆகிய மூன்று நாட்களும் வடமாரட்சி கிழக்கு மக்களும் கடற்புலிகளும் இணைந்து நடாத்தும் மாவீரர் எழுச்சி விழா.

உடுத்துறை மகாவித்தியாலய மைதானத்தில் அலங்கரித்த மண்டபத்தில் ஆயிரக்கணக்கான மாவீரர்களது திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

**25/11/2004**

காலை 9.00 மணிக்கு காலை நிகழ்வாக பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல் நிகழ்வுகள் இடம் பெறும்.

மாலை 3.00 மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழீழ கற்படை நடாத்தும் அணிவகுப்பு

* கடற் கரும்புலி படையணி
* சாள்ஸ்/நளாயினி படையணி
* சிறப்புப் படையணி

ஆகியன இணைந்து வழங்கும் தமிழீழ கடற்படையின் அணிவகுப்பு இடம் பெறும்.

பின் மாலை பெற்றோர் கௌரவிப்பும், மேடை நிகழ்வும் இடம் பெறும் அதில் நினைவுரைகளும், கலை நிகழ்வுகளாக நடனம்,பாடலுக்கான அபிநயம், கடற்புலி மகளிர் போராளிகளின் நாடகம் இடம் பெறும்.

**26/11/2004**

காலை நிகழ்வாக பொதுச்சுடரேற்றல், தமிழீழத் தேசியக் கொடி ஏற்றல் போன்ற நிகழ்வுகள் இடம் பெறும்.

அத்துடன் தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடும் முகமாக அப்பகுதி மக்களால் வாழ்த்துமடல் திரை நீக்கம் செய்யப்பட்டு துவிச்சக்கரவண்டி பவனியாக முல்லை நகர் நோக்கி எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நிகழ்வில் தளபதியிடம் கையளிக்கப்படும்.

அத்துடன் 50' உயரமான வெளிச்சக் கோபுரம் திறந்து வைக்கப்படும்.

மாலை 6.00 மணிக்கு தமிழீழ வடிவிலான கேக் வெட்டும் நிகழ்வும் இடம் பெறும்.

பின் மேடை நிகழ்வுகள் இடம் பெறும் இதில் கலை நிகழ்வுகளும் சிறப்புரைகளும் இடம் பெறும் கலை நிகழ்வாக நாடகம்,நடனம் என்பன இடம் பெறும்.

**27/11/2004**

காலை நிகழ்வாக 9.00 மணிக்கு பொதுச் சுடரேற்றல் தமிழீழ தேசியக் கொடியேற்றல் போன்ற நிகழ்வுகள் இடம் பெறும்

மாலை உடுத்துறை மா.து. இல்லத்தில் நிகழ்வு இடம் பெறும்

(சி.10800)

## முல்லைத்தீவு மாவட்டம்

### 2004 மாவீரர் எழுச்சி நாளைமுன்னிட்டு 25,26,27 ஆகிய மூன்று நாட்களும், முல்லை மக்களும், கடற்புலிகளும் இணைந்து நடாத்தும்

# மாவீரர் எழுச்சி நாள்

முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் அலங்கரித்த மண்டபத்தில் ஆயிரக்கணக்கான மாவீரர்களது திருவுருவப்படங்கள் வைக்கப்படவுள்ளன.

**25.11.2004.**

**காலை 8.30 மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழீழ கடற்படை நடாத்தும் அணிவகுப்பு**

* கடற்கரும்புலிகள் படையணி
* சாள்ஸ் / நளாயினி படையணி
* சிறப்புப் படையணி

*ஆகியன இணைந்து வழங்கும் தமிழீழ கடற்படையின் அணிவகுப்பு*

காலை 9.00 மணிக்கு பொதுச்சுடரேற்றல், தமிழீழ தேசியக்கொடிஏற்றல், திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றல், அகவணக்கம் மலர்வணக்கம் என்பன இடம் பெறும்.

மாலை மைதான மேடையிலே நினைவுரைகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

கலை நிகழ்வுகளாக, அஞ்சலிநடனம், தனிநடனம், குழு நடனம், கவியரங்கம், சிந்துநடைக்கூத்து, நாடகம் என்பன இடம்பெறும்.

**குறிப்பு: —** மைதான வளாகத்தில் கொட்டும் மழைபெய்தாலும் மக்கள் அமர்ந்து பார்க்கக் கூடிய விதத்தில் பாரிய இரு கொட்டகைகள் அமைத்து அதற்குள் மேடைபோட்டு நிகழ்வு இடம் பெறவுள்ளது.

**26.11.2004.**

காலை 9.00 மணிக்கு பொதுச்சுடரேற்றல், தமிழீழ தேசியக்கொடிஏற்றல் திருவுருவப்படங்களுக்கு, ஈகச்சுடரேற்றல்,அகவணக்கம் ,மலர் வணக்கம் என்பன இடம்பெறும்.

மாலை நிகழ்வாக மாலை 5.00 மணிக்கு முல்லை வாழ்மக்களால் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் பிறந்த நாள் நினைவுவிழாவாக சமாசக் காரியாலயத்தில் 50 கிலோ கேக்கும், முல்லைநகர் சந்தியில் வர்த்தகர்கள், மக்களால் 50 பானையில் பொங்கல் நிகழ்வும் இடம்பெறும். பின் மாலை 7.00 மணிக்குப் பல்வேறு வகையான வாணவேடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

பின்னர் மைதான மேடையில் கலைநிகழ்வுகளும் நினைவுரைகளும் இடம்பெறும்.

கலை நிகழ்வுகளாக அஞ்சலிநடனம், தனிநடனம், குழு நடனம், நாடகம், கவியரங்கம், விடுதலைப்பறவைகள் இன்னிசை கானங்கள் என்பன இடம் பெறும்.

**27.11.2004.**

காலை 9.00 மணிக்கு பொதுச்சுடரேற்றல், தமிழீழ தேசியக்கொடி ஏற்றல், திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றல், மலர்வணக்கம், அகவணக்கம் என்பன இடம்பெறும்.

மாலை 4.00 மணிக்கு ஆலடிச்சந்தியில் இருந்து விடுதலைப்புலிகளின் தமிழீழ கடற்படை, கடற்கரும்புலி படையணி, சாள்ஸ், நாளாயினி கடற்தாக்குதல் படையணி என்பன இணைந்து நடாத்தும் அணி வகுப்பு இடம்பெறும்.

தொடர்ந்து தமிழீழக்கடற்பரப்பில் தமிழீழக் கடற்படையின் கடற்கலன்களின் அணிவகுப்பு மரியாதை இடம்பெறும் பின் மாலை தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர்நாள் உரை இடம்பெறும். தொடர்ந்து கடலிலே மிதக்க விடப்பட்டு இருக்கும் விசேட மேடையில் மாவீரர்கள் நினைவாக ஈகச்சுடர்கள் ஏற்றப்பட தொடர்ந்து அதேநேரம் கடற்கரையில் வைக்கப்பட்டுள்ள மாவீரர்கள் நினைவு பந்தங்கள் ஏற்றப்படும்.

(சி.10799)

## இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்

SLTMA

## விருது வழங்கும் விழா 2004

SLTMA SLTMA

காலம் : 28-11-2004 பிற்பகல் 5.00 மணி.

இடம் : இராமகிருஷ்ணமிஷன் மண்டபம் வெள்ளவத்தை.

### விருது பெறுவோர்

| | |
|---|---|
| எஸ். எட்வேர்ட் (முன்னாள் வீரகேசரி, சுடரொளி) | கனகரவி (சுயாதீனப் பத்திரிகையாளர்) |
| எஸ். சிவபாலன (ஈழநாதம்) | சோ. ஸ்ரீதரன் (சுயாதீனப் பத்திரிகையாளர்) |
| எம். கே.ஜுவகதாஸ் (வீரகேசரி) | எஸ். வேதநாயகம் (தினக்குரல்) |
| எம். ஏ.எம். நிலாம் (தினக்குரல்) | ஜோய் ஜெயக்குமார் (வீரகேசரி) |
| இராஜேஸ்வரி சண்முகம் (இலங்கை வானொலி) | அ. யோகமூர்த்தி (தினக்குரல்) |
| என்.குருபரன் (சூரியன் எப்.எம்.) | |

விருதுபெறும் ஊடகவியலாளர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.

ஈழநாதம்

# ஈராக்கில் தீவிரவாத அச்சுறுத்தல் அதிகரிப்பு சுமுகமான தேர்தல் குறித்துச் சந்தேகம்!

## –வாக்களிக்க எவரும் முன்வரவில்லை

(பாக்தாத்)

**ஈராக்கில் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் தீவிரமடைந்து வரும் நிலையில் மறுபுறம் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இதனால் தேர்தல் சுமுகமாக நடக்குமா என்ற அச்சம் உருவாகி வருகிறது.**

ஈராக்கில் சதாம் ஆட்சி ஒழிக்கப்பட்ட பின்பு முதன் முறையாக சனநாயக ரீதியான தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வரும் சனவரி 30ஆம் திகதி ஈராக்கில் தேர்தல் நடைபெறுகிறது. முன்னதாக வாக்காளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. ஆனால் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக வாக்காளர்கள் பெயரைப் பதிவு செய்ய முன்வரவில்லை. பாக்தாத்தில் உள்ள வாக்காளர் பதிவு மையத்தில் இதுவரை ஒருவர் கூட பெயரைப் பதிவு செய்யவில்லை. 'தலையைத் துண்டித்துக் கொலை செய்து விடுவோம்' என்று தீவிரவாதிகள் மிரட்டியுள்ளதால் பொதுமக்கள் பயந்துள்ளனர்.

இதுகுறித்து தேர்தல் ஆணையகம் தெற்கு பாக்தாத் தலைவர் முகமது ஹமீத் கூறியதாவது, சில வாக்காளர் பதிவு மையங்களுக்கு அச்சுறுத்தல்கள் வந்துள்ளன. தேர்தல் நடத்த நாங்கள் பயப்படவில்லை. பாக்தாத்தில் மொத்தம் 56 வாக்காளர்கள் பதிவு மையங்கள் உள்ளன. இதில் 10 மையங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளவை என்று கண்டறியப்பட்டுள்ளன. இதையடுத்து அந்த மையங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. மேற்கு பாக்தாத்தில் மொத்தம் 706 ஊழியர்கள் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டனர். அச்சுறுத்தல் காரணமாக இவர்கள் பணியில் இருந்து விலகிச் சென்றுவிட்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகள் நல்ல முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, சிக்கலின்றித் தேர்தல் நடத்தி முடிக்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு முகமது ஹமீத் கூறினார்.

பாக்தாத்தில் வாக்காளர் பதிவு மைய அதிகாரிகள் நேரடியாகவே வாக்காளர்களைத் தேடிச் செல்கின்றனர். ஆனால் இதுவரை யாரும் பெயரைப் பதிவுசெய்யவில்லை. இதுகுறித்து வாக்காளர் பதிவு மைய அதிகாரிகளில் ஒருவரான இமாத்-அல்-வாசி என்பவர் கூறுகையில், "பாக்தாத்தில் உள்ள கால்நடை மற்றும் விவசாயக் கல்லூரிகளுக்குச் சென்றேன். அங்குள்ள ஆசிரியர்களும், மாணவர்களும் அச்சுறுத்தப்பட்டுள்ளதால் அவர்கள் வாய் திறக்கவில்லை" என்றார். இந்த அச்சுறுத்தல் காரணமாக ஈராக்கில் தேர்தல் பணிகள் முடங்கியுள்ளன. இதனால திட்டமிட்டவாறு தேர்தல் நடக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

## விமானங்களுக்குத் தடை

(பெய்ஜிங்)

சீனாவில் அண்மையில் ஏற்பட்ட விமான விபத்துக்குறித்து ஆராய அந்நாட்டு அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதுடன், இவ்வகையான விமானங்களைப் பாவிக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.



பலஸ்தீனியப் பாராளுமன்றத் தொடக்க நிகழ்வில் பலஸ்தீனியப் பிரதமர் அகமட்குரே (இடம்) தொழுகையில் ஈடுபடுகின்றார். அருகில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் மகமூத் அபாஸ் காணப்படுகின்றார்.

# ஆப்கானிஸ்தானில் கடத்திச் செல்லப்பட்ட மூன்று ஐ.நா. ஊழியர்கள் விடுதலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த ஒக்டோபர் மாதம் கடத்திச் செல்லப்பட்ட ஐ.நா.ஊழியர்கள் மூன்று பேரும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். ஆப்கானிஸ்தானில் ஐ.நா. சார்பில் பணியாற்றிக் கொண்டிருந்த அயர்லாந்தைச் சேர்ந்த அனெட்டாபிளானிக்கன், கொசோவோ நாட்டைச் சேர்ந்த ஷீகிபி ஹெபிபி என்ற பெண் மற்றும் பிலிப்பைன்ஸ்நாட்டைச் சேர்ந்த தூதரக அதிகாரி அன்ஜெலிடோ நாயான் ஆகியோர் கடந்த ஒக்டோபர் மாதம் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த போது தலிபான் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டனர். கடத்திச் செல்லப்பட்டு நான்கு வாரங்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் அவர்கள் மூன்று பேரும் பத்திரமாக விடுவிக்கப்பட்டனர்.

இது குறித்து ஆப்கான் உள்நாட்டு விவகார அமைச்சர் அலி அகமது ஜலாலி கூறுகையில், "ஐ.நா. பணியாளர்கள் மூன்று பேரும் பத்திரமாக நேற்று முன்தினம் திரும்பி வந்தனர். அவர்களை விடுவிக்கத் தீவிரவாதிகளுக்கு எந்தப் பணமும் கொடுக்கவில்லை. சிறையில் அடைக்கப்பட்டுள்ள தலிபான் கைதிகளை விடுதலை செய்யவுமில்லை. தற்போது மூன்று பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. மூன்று பேரும் நலமாக உள்ளதாக மருத்துவர்கள் கூறினர்."



ஈராக்கின் பலூஜாவில் இருந்து இடம்பெயர்ந்து சப்பகற் எனும் கிராமத்தில் வசிக்கும் சிறுமி நீர்த்தாங்கியிலிருந்து நீரைக் குடிக்கிறார்.

# தரமற்ற ஏற்றுமதிப் பொருட்களால் சீனாவிற்கு பலகோடி ரூபாய் இழப்பு!

(பெய்ஜிங்)

இறக்குமதி செய்யப்பட்ட சீனப் பொருட்களின் தரம் குறைவாக இருப்பதாகக் கூறி இந்தியா உட்பட பல நாடுகள் அவ்வப்போது சீனப் பொருள்களைத் திருப்பி அனுப்புவதால் 1979 முதல் ரூ.171,000 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சீனா கூறியுள்ளது.

சீன வர்த்தக அமைச்சக அதிகாரி வாங்ஷிசுன் தெரிவிக்கையில், இறக்குமதியாகும் சீனப் பொருட்களின் தரம் குறைவாக இருப்பதாகக் கூறி திருப்பி அனுப்பிவிடும் முதல் 10 நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இந்தியா, ஆர்ஜெண்டினா, துருக்கி, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மெக்சிகோ, கனடா, பிரேசில் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

1979 முதல் 34 நாடுகள் சீனப் பொருட்களைத் திருப்பி அனுப்பியுள்ளன. 4000 வகையான பொருட்கள் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. இதனால் ரூ.171,000 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

சீன ஏற்றுமதி வரும் ஆண்டில் 30 சதவீதம் அதிகரிக்கும். அதிக ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவுக்கும், ஜேர்மனிக்கும் அடுத்த இடத்தைச் சீனா கைப்பற்றும் என்று கூறினார்.



மேற்கு ஈராக்கில் சிரியா எல்லைப்பகுதியில் ஒரு தேடுதல் நடவடிக்கையின் பின்னர் அமெரிக்கக் கடற்படையினர் அமெரிக்க உலங்கு வானூர்தியில் ஏற்றப்படுகின்றனர்.

# 2025இல் சந்திரனில் தளம் ரஷ்யா புதிய திட்டம்

(மொஸ்கோ)

சந்திரனில் 2025ஆம் ஆண்டு தளம் அமைக்க ரஷ்யா திட்டமிட்டு இருக்கிறது. ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத் தலைவர் நிக்கோலாய் மாய்சேயேவ் நிருபர்களிடம் கூறியதாவது,

சந்திரனின் உட்கட்டமைப்பு, அதன் வளங்கள் பற்றி ஆராயவும், சந்திரனின் பாறைகளின் மாதிரிகளை எடுத்து பூமிக்கு அனுப்பவும் இந்தத்தளம் பயன்படும்.

சூரிய மண்டல ஆய்வில் ஈடுபடவும், தானியங்கி விண்கலத்தை உருவாக்கவும் ரஷ்யா திட்டமிட்டு உள்ளது. 2050ஆம் ஆண்டு வாக்கில் செவ்வாய்க்கிரகத்தில் தளம் அமைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இவ்வாறு நிக்கோலாய் கூறினார்.



தாய்லாந்தில் முஸ்லிம்மாகாணமான பற்றாஹியிலுள்ள பௌத்த விகாரையின் முன் படையினர் ஒருவர் காவற்கடமையில் ஈடுபடுகின்றார். இரு முஸ்லிம் போராளிகளைப் பொலிசார் சுட்டுக்கொன்றதையடுத்தே இப்பதற்றம் நிலவுகிறது.

# சுகாதார சீர்கேட்டைத் தடுக்க முற்பட்ட பொதுமக்கள் மீது பொலிசார் தாக்குதல்

## இந்தோனேசியாவில் ஐவர் காயம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் மக்கள் பொலிசாருக்கு எதிராக மேற்கொண்ட ஆர்ப்பாட்டமொன்றின் போது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 5பொதுமக்கள் பலத்த காயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில், இந்தோனேசியாவின் மேற்கு யாவா பகுதியிலுள்ள கிளாபானுங்கள் என்ற நகரத்தின் குடியிருப்பு ஒன்றின் அருகே குப்பைகளைச் சுத்திகரிக்கும் கிடங்கை அமைக்க முடிவு செய்து அதற்கெனக் கட்டடங்கள் அமைக்கும் பணி இடம்பெற்றது. அவ்வாறு கட்டப்பட்டால் மக்கள் வாழும் பகுதியில் பெரும் சுகாதார சீர்கேட்டை உருவாக்கும் என்று அம்மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைந்துபோகுமாறு பொலிசார் எச்சரிக்கை விடுத்தும் பொதுமக்கள் கலைந்து செல்லவில்லை. மாறாக பொதுமக்களுக்கும், பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் வன்முறையாக அதிகரித்தது.

பொலிசாரின் வாகனங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் அடித்தும் எரித்தும் உள்ளனர். இதன் காரணமாகப் பொலிசார் ஆர்ப்பாட்டக்காரரை அடக்கும் பொருட்டு இறப்பர் குண்டுகளால் சுட்டுள்ளனர். இதன்போது 5பேர் காயமடைந்தனர்.

வன்முறை இடம்பெற்றதன் காரணமாக அந்த இடம் ஒரு போர்க்களம் போல் காட்சியளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பிரதேச ரீதியாக சிறப்புற நடைபெறும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் மாவீரர்களின் பெற்றோர்கள் பிரதேச ரீதியாக கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். பாண்டியன் குளம் பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு பாலிநகர் மகாவித்தியாலய மண்டபத்தில் திங்கள் காலை 10.00 மணிக்கு முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் பாலிநகர் மகாவித்தியாலய மாணவர்களின் பாண்ட்வாத்திய இசைமுழங்க மாவீரர்களின் பெற்றோர்களை பாடசாலை மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன் போதுபொதுச் சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி போராளி புயலவன் ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி ஏற்றி வைக்க, முதல் மாவீரர் லெப் சங்கரின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரினை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஏற்றினார்.

அரங்க நிகழ்வாக தலைமையுரையைத் தொடர்ந்து வரவேற்புரையை பாண்டியன்குள பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி.சண்முகலிங்கம் நிகழ்த்த, கருத்துரைகளை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி பொறுப்பாளரில் ஒருவரான பாவலன், மாந்தைகிழக்கு உதவி அரசாங்க அதிபர் ம.ஜெகு ஆகியோர் ஆற்றினர். சிறப்புரையை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆற்றினார். தேசிய எழுச்சிப்பேரவையினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், முல்லைமாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யோகபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று மண் மீட்புப் போரில் இணைந்து வீரகாவியமான 51 மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை 11.00 மணிக்கு பாடசாலையின் உயர்தர மாணவன் சீனிவாசகம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பொதுச்சுடரினை ஆசிரியர் சோதிநாதன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை யோகபுரம் மகாவித்தியாலய முதல்வர் திருமதி.க.கிருஷ்ணபிள்ளை ஏற்றிவைத்தார். மாவீரர்களின் பொது திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை திருமதி. தம்பையா ஏற்றியதைத் தொடர்ந்து ஈகச்சுடர்கள், மலர்மாலைகள் பெற்றோர்கள் ஏற்றலும், அணிவித்தலும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து கருத்துரையினை பாடசாலையின் ஆசிரியர் சிவசத்தியமோகன், ஆசிரியர் திருமதி. சண்முகநாதன் சரோஜாதேவி ஆகியோர் வழங்க, சிறப்புரையை பாடசாலையின் முதல்வர் திருமதி க.கிருஸ்ணபிள்ளை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

உடுப்பிட்டி பல நோ.கூ.சங்கங்களின் ஊழியர்களினால் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களான மாவீரர் பெற்றோர்களே கடந்த ஞாயிறு மாலை 3.00மணிக்கு கூட்டுறவுச்சங்க ஒன்றுகூடல் மண்டபத்தில் உ.ப.நோ.கூ.சங்க தலைவர் தர்மகுலசிங்கம் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்விலும் சு.அரசண்ணா அவர்கள் கலந்து சிறப்புரையினை நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இம்ரான்-பாண்டியன் சிறப்புப்படையணியின் ஏற்பாட்டின் கீழ் யாழ்.மாவட்ட அரசியல் துறையினரின் ஒழுங்கமைப்பின் கீழ் பிரதேச மக்களின் ஆதரவுடன் படையணியினரின் மாவீரர்களின் நினைவுநாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று முதல் 27ஆம் திகதி வரை கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள ஸ்ரீ கிருபாகர சுப்பிரமணிய முருகன் ஆலய பகுதியில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இந் நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விசேட பந்தலில் சுமார் ஆயிரத்து நூறுக்கும் மேற்பட்ட மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்ரான்-பாண்டியன் பிறந்த ஊரான கொக்குவிலில் இந் நிகழ்வு மிகவும் எழுச்சிகரமாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை மன்னாரில் மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அடம்பன் பிரதேசத்தில் உள்ள அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்தில் பிரதேசப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக தேசியக் கொடியினை வடபோர் முனைத் தளபதி கேணல் ஜெயம் அவர்கள் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கையன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மண்டப நிகழ்வில் சிறப்புரையினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் மற்றும் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் வரதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இச்சிறப்புரையில் அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் கருத்துத் தெரிவிக்கையில்,மாவீரர்களின் தியாகம் மகத்தானது எனவும், அவர்கள் இதயத்தால் பூசிக்கப்பட வேண்டியவர்கள் எனவும் கூறியிருந்தார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அதன் பின்னர் மாவீரரின் பெற்றோர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

இது போன்று நேற்றுமுன்தினம் மடுப்பிரதேசத்திலும் மாவீரரின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் தேசியக் கொடியினை வட போர் முனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்றி வைத்தார்.

பொதுச்சுடரினை பிரதேசப் பொறுப்பாளர் இசைச் செல்வன் ஏற்றிவைத்தார். மண்டப நிகழ்வில் சிறப்புரையினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆற்றினார். தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. பின் மாவீரரின் பெற்றோர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. பூநகரி செட்டியகுறிச்சி கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட கறுக்காய்த்தீவு, செட்டியகுறிச்சிக் கிராமத்தைச் சேர்ந்த 11 மாவீரர் பெற்றோருக்கான கௌரவிப்பு தே.எ பேரவை உறுப்பினர் சி.சிவப்பிரகாசம் தலைமையில் கடந்த ஞாயிறு காலை 9.00 மணிக்கு கறுக்காய்த்தீவு கிராம அபிவிருத்தி சங்கத்தில் இடம் பெற்றது. பொதுச்சுடர் ஏற்றலைத் தொடர்ந்து தேசியக் கொடியை போராளி சிவனேசன் ஏற்றினார். பின்னர் தத்தமது பிள்ளைகளின் உருவப்படங்களுக்கு ஈகச்சுடர் ஏற்றல் நிகழ்வு இடம் பெற்றது. தொடர்ந்து சிறப்பு நினைவுரைகளை ஓய்வு பெற்ற அதிபர் வே.முத்துக்குமாரு, வைரநாதன், கிராமசேவகர் சிவலிங்கம், சுன்னாவில் பாடசாலை அதிபர் சி.சிவநாதன் ஆகியோர் ஆற்றினர்.

முள்ளியவளைப் பிரதேசத்தில் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோரை மாவீரர் நாளினை முன்னிட்டு கௌரவிக்கும் நிகழ்வு சிறப்புற இடம் பெறவுள்ளது.

மேற்படி கௌரவிப்பு நிகழ்வானது முள்ளியவளை வித்தியானந்தகல்லூரியில் சிறப்புற அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் இன்று காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 4 மணிவரை முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் விடுதலைப்புலிகளின் துறை சார்ந்த பொறுப்பாளர்கள், தளபதிகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ, 19, 41,கா,24)

## இரணைமடு வான் கதவு திறப்பால் 35 குடும்பங்கள் இடம் பெயர்வு

பெய்து வரும் கடும் மழையினால் இரணைமடுக்குளம் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் மக்கள் தொடர்ந்து இடம் பெயர்ந்து வருகின்றனர். வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், பன்னங்கண்டி, மருதநகர்ப் பகுதி மக்களே இடம் பெயர்ந்து வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதில் மருதநகர் 07 குடும்பங்கள், சிவிச்சென்ரர், பன்னங்கண்டி 28குடும்பங்கள் என மொத்தம் 35 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் இவ்வாறு தஞ்சம் புகுந்தனர். இவர்களில் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் எனப் பலதரப்பினரும் அடங்குகின்றனர். இவர்களுக்கு இரு நிறுவனங்கள் இணைந்து மூன்று வேளையும் சமைத்த உணவு வழங்கி வருகின்றனர். மருதநகர் (நெக்டோ) வடக்கு, கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், சிவிக்சென்ரர், பன்னங்கண்டி கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம் ஆகிய நிறுவனங்களே சமைத்த உணவினை மூன்று வேளைகளும் வழங்கி வருகின்றனர். இவ் இடம் பெயர்ந்த மக்களுக்கு வேறு உதவிகள் எவையும் இல்லாமல் இடையூறுகளுக்குள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (12)



அண்மைக்காலமாக தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக பல ஏக்கர் நெல்வயல்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. மழை தொடருமாக இருந்தால் மேலும் பல ஏக்கர் நெல்வயல்கள் நீரில் மூழ்கி அழியும் சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வாறு நீரில் மூழ்கியிருக்கும் நெல் வயல்களை படத்தில் காணலாம். (படம்-வரன்)

## கண்டெடுப்பு

138 ஆம் கட்டை மாங்குளம் எனும் முகவரியைச் சேர்ந்த ச.உதயகுமார் என்பவரின் உந்துருளிக்குரிய தமிழீழ மோட்டார் ஊர்தி அனுமதி ஆவணம் கிளிநொச்சி வைத்தியாலைக்கு முன்பாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் கிளிநொச்சி ஏ-9 பாதையில் அமைந்துள்ள ஈழநாதம் பணிமனையில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (சு)

## மல்லாவி மாவீரர் மண்டபம் முன் கரும்புலிகள் நினைவாலயம்

(அலுவலகசெய்தியாளர்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு மல்லாவிப் பிரதேசத்தில் கரும்புலிகள் நினைவாலயம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மல்லாவி மாவீரர் மண்டபத்திற்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட இந்த கரும்புலிகள் நினைவாலய மண்டபம் இன்று பிற்பகல் 4.00 மணியளவில் திறந்து வைக்கப்படும்.

இந்த நினைவாலயத்தில் 14 கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்படவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் யோகபுரம் மல்லாவி வணிகர் மன்றத்தினர் அன்புடன் அழைக்கின்றனர். (கு)

## துயிலுமில்லத்தில் சிரமதானப்பணி

(உடையார் கட்டு)

மாவீரர் நினைவெழுச்சி நாளை முன்னிட்டு விசுவமடு-தேராவில் துயிலுமில்லத்தில் பல அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சனியன்று துயிலுமில்லத்தில் விசுவமடுப் பிரதேசத்தைச் சேர்ந்த அழகக சங்க உரிமையாளர்கள், பணியாளர்கள், சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (19)

## குடியிருப்புகளை சூழ வெள்ளம் மக்கள் வெளியேற முடியாது அவதி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சில நாட்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக பல கிராமத்து வீதிகளில் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் தேங்கி நிற்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக, மூன்றடிக்கு மேல் உயரத்தில் வழிந்தோட முடியாத நிலையில் குடியிருப்புக் களைச் சூழ வெள்ளநீர் தேங்கியுள்ளமையின் காரணமாக குடியி ருப்பு மக்கள் பலர் குடியிருப்புக் களிலிருந்து வெளியே செல்ல முடியாது அவலப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

பரந்தன், உமையாள்புரம், குமரபுரம், பரந்தன் 1ஆம் கட்டை, உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்கு, இரத்தினம்பண்ணை ஆகிய கிராமத்து வீதிகள் நீரில் மூழ்கியுள்ளமையின் காரணமாகவே இக்கிராமத்து மக்கள் இவ் அவலத்தினை எதிர்நோக்கியுள்ளனர்.

சிறிலங்கா இராணுவம் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் கழிவு நீர் வாய்க்காலகளை மூடி மண் அரண்கள் அமைத்ததன் விளைவாகவே மழை வெள்ளம் வழிந்தோட முடியாதநிலையில் வெள்ள நீர்தேக்கம் கண்டுள்ளதாக மேற்படி கிராமத்து மக்க்ள் தெரிவித்துள்ளனர். (சோ,சு)

## கடனுதவி

போரினால் பாதிப்புற்ற சிறுவர்களின் பெற்றோருக்கு வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் விவசாய கடன் உதவியினை வழங்கியுள்ளது. வவுனியா மாவட்ட சிறுவர் நலத்திட்டத்தினால் இளமருதங்குளம் கிராமத்தில் போரினால் பாதிப்புற்ற சிறுவர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் பெற்றோர்களுக்கு விவசாயத்திற்கான கடன் 6 மாத கால தவணையில் ஒரு குடும்பத்திற்கு 10,000 ரூபா வீதம் 13 பயனாளிகளுக்கு வவுனியா சனச வங்கி நிதியுதவியுடன் வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (10)



வெள்ளத்தினால் மூழ்கியுள்ள எட்டாம் வாய்க்கால் ஒழுங்கை ஒன்று

# உயர் பாதுகாப்பு வலயம், காவலரண்களால் பார்த்தீனியத்தை முற்றாக அழிக்கமுடியவில்லை

**யாழ்.குடாநாட்டில் பார்த்தீனியம் செடியின் பரம்பலைக் கட்டுப் படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் அதனை முழு அளவில் அமுல்படுத்துவதற்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலய நடைமுறை மற்றும் மிதிவெடி அபாயம் என்பன பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.**

பார்த்தீனியம் செடியைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ். குடாநாட்டில் பல்வேறு நடவடிக் கைகளையும் பல தரப்பினரும் எடுத்துள்ளனர். எனினும் மக்கள் நடமாட முடியாத இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களிலும், மிதிவெடி அகற் றப்படாத பகுதிகளிலுமே இச் செடியின் பரம்பல் ஆதிகம் காணப்படுகின்றது.

இதனால் இச் செடியின் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற் கான நடவடிக்கைகளை முழுமை யாக நடைமுறைப்படுத்த முடி யாது இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவலை தெரிவித் துள்ளனர். (33)



மாவீரர் நாளை முன்னிட்டு காரைநகர் வலந்தலைச் சந்தியில் காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கும் மாவீரர் நினைவு வளைவை படத்தில் காணலாம்.

(படம் : செல்வா)

-மண்டைதீவில் மீளக்குடியேறிய மக்களுக்கு-

## கண்ணிவெடி விழிப்புணர்வு பயிற்சி வழங்க கடற்படை தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவுப் பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ள மக்களிடையே மிதிவெடி அபாயங்கள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அப்பகுதியில் நிலை கொண் டுள்ள கடற்படையினர் முற்றாக அனுமதி மறுத்துள்ளனர்.

மண்டைதீவில் உள்ள சில பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டாலும் மண்டை தீவு முற்றுமுழுதாக இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வருகிறது.

இந்நிலையில் அங்கு மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு வெடி பொருட்கள் பற்றிய விழிப்புணர்வையும், அறிவையும் வழங்கினால் அது அப்பகுதிகளில் நிலை கொண்டுள்ள கடற் படையினரது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்து விடும் என்பதை காரணம் காட்டியே படையினர் இதற் கான அனுமதியை மறுத்துள் ளனர். இதனால் அப்பகுதி மக்கள் மிதிவெடி அபாயம் குறித்து விழிப்புணர்வுகள் இன்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் மற்றும் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானி கரகம் ஆகியன இணைந்து சமூக நல உத்தியோகத்தர்களுக் கான மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

இக் கருத்தரங்குகள் மூலம் சுமார் 1000 பேர் விழிப்புணர்வு நடவடிக்கைகளால் பயனடைந் துள்ளனர். (33)

## குடாநாட்டில் கொள்ளைச் சம்பவங்களுக்கும் தேசவிரோதக்குழுக்களுக்கும் நெருங்கிய தொடர்பு

### சிறிலங்கா பொலிஸ் தரப்பு சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அடிக்கடி இடம்பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களிற்கும், யாழ். இல் செயற்பட்டுவரும் தமிழ் தேசவிரோதக் கும்பல்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக சிறிலங்கா பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக வழிப்பறிகள் வீடுடைத்து திருடல், ஆட்கடத்தல், வாகனக் கடத்தல், கொலை செய்து பணம் பறித்தல் எனப் பல சம்பவங்கள் இனந்தெரியாதோரால் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் இராணுவச் சீருடைகளில் வருவோராலும் ஆயுதங்களுடன் வருவோராலுமே நடத்தப் படுவதாக விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதால் இராணுவத்தினருடைய ஒத்துழைப்புடன் யாழ். குடாநாட்டில் செயற்பட்டு வரும் தமிழ் தேசவிரோத கும்பல்களுக்கும், இவ்வாறான சம்பவங்களுக்கும் இடையே தொடர்புகள் இருக்கலாம் எனப் பொலிசார் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர் (33)

## படையினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில் மீள்குடியமர்ந்தோருக்கு விழிப்புணர்வூட்டல்

### யு.என்.எச்.சி.ஆர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

படையினரால் அனுமதிக் கப்பட்ட பகுதிகளில் மீளக் குடியமரச் சென்றுள்ள மக்களிடையே வெடிபொருட்களைப் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் அகதிகளிற் கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராலயம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முடக்கி வைத்திருந்த மக்கள் குடியிருப்புக்களில் சிலவற்றை அண்மைக்காலமாக படையினர் மக்களிடம் ஒப்படைத்தும் அங்கு மீளக்குடியமரவும் அனுமதித்து வருகின்றனர்.

இவ்வாறு குடியேற அனுமதியளிக்கப்பட்ட பிரதேசங்கள் சீரான முறையில் வெடிபொருட்கள் அகற்றப்படாத பிரதேசங்களாகக் காணப்படுவதால் அங்கு குடியமரச்சென்றுள்ள மக்கள் எதிர்டிகொள்ளும் மிதிவெடி அபாயத்தைக் கருத்திற்கொணடே ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக் கான தூதுவராலய பிரதிநிதிகள் இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன் மக்கள் குடியேறச் சென்றுள்ள பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு வருவதுடன் விழிப்புணர்வூட்டலிலும் ஈடுபட்டுள்ளனர். (33)

### முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர் குடும்பங்கள் செல்ல வேண்டிய துயிலுமில்லமும், பேருந்து வழித்தடமும்

| இல | ஆரம்பிக்கும் இடம் | நேரம் | பயணிக்கும் வழித்தடம் | துயிலுமில்லம்/இடம் |
|---|---|---|---|---|
| 01. | புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் | 09. மணி | புதுக்குடியிருப்பு-உடையார் கட்டு | யாழ்ப்பாணம் |
| 02. | புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் | 09. மணி | ஒட்டுசுட்டான்-மாங்குளம் | வவுனியா |
| 03 | புதுக்குடியிருப்பு, கொக்குளாய், பாடசாலை | 12-05 மணி | புதுக்குடியிருப்பு-முள்ளிய வளை | முள்ளியவளை |
| 04 | புதுக்குடியிருப்பு, கொக்குளாய், பாடசாலை | 12-05 மணி | புதுக்குடியிருப்பு-விசுவமடு | விசுவமடு |
| 05 | புதுக்குடியிருப்பு, கொக்குளாய், பாடசாலை | 09. மணி | புதுக்கு-ஒட்டு-மாங்-பாண்டி-துணு | முழங்காவில் |
| 06 | புதுக்குடியிருப்பு, கொக்குளாய், பாடசாலை | 02. மணி | ஒட்டுசுட்டான்-மாங்குளம் | வன்னிவிளான்குளம்-ஆலங்குளம் |
| 07 | புதுக்குடியிருப்பு, கொக்குளாய், பாடசாலை | 02. மணி | புதுக்கு-உடையா-கிளிநொச்சி | கிளிநொச்சி |
| 08 | முள்ளியவளை கலைமகள் பாடசாலை | 02. மணி | முல்லை-புதுக்குடியிருப்பு-கிளிநொச்சி | கிளிநொச்சி |
| 09 | முள்ளியவளை கலைமகள் பாடசாலை | 02. மணி | முள்ளியவளை-தண்ணீரூற்று | களிக்காடு |
| 10 | முள்ளியவளை கலைமகள் பாடசாலை | 02. மணி | முள்ளியவளை-முல்லைத்தீவு-அளம்பில் | அளம்பில் |
| 11 | முள்ளியவளை கலைமகள் பாடசாலை | 02. மணி | முள்ளி-குமுளமு- செம்மலை-மணலாறு | மணலாறு |
| 12 | முள்ளியவளை கலைமகள் பாடசாலை | 02. மணி | முள்ளி-முல்லை- புதுக்-விசுவமடு | விசுவமடு |
| 13 | ஒட்டுசுட்டான்,ம.வி., கற்சிலை மடு பாடசாலை | 12-05 மணி | ஒட்டுசுட்டான்- முள்ளியவளை | முள்ளியவளை |
| 14 | ஒட்டுசுட்டான்,ம.வி., கற்சிலைமடு பாடசாலை | 02. மணி | ஒட்டுசுட்டான்- மாங்குளம் | வன்னிவிளான்குளம், ஆலங்குளம் |
| 15 | மாங்குளம் மகாவித்தியாலயம் | 02. மணி | மாங்குளம் பனிக்கன்குளம்-கிளி | கிளிநொச்சி |
| 16 | கரிப்பட்டமுறிப்பு மகாவித்தியாலயம் | 02-05 மணி | ஒலுமடு-மாங்குளம் | வன்னிவிளான்குளம், ஆலங்குளம் |
| 17 | பாண்டியன்குளம்,பாலிநகர் பாடசாலை | 02-05 மணி | வன்னிவிளான்குளம் | வன்னிவிளான்குளம் |
| 18 | பாண்டியன்குளம்,பாலிநகர் பாடசாலை | 02. மணி | பாலிநகர் - கிளிநொச்சி | கிளிநொச்சி |
| 19 | மல்லாவி மத்திய கல்லூரி | 09. மணி | மல்லாவி-மாங்குளம் யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 20 | மல்லாவி மத்திய கல்லூரி | 09. மணி | மாங்குளம் - வவுனியா | வவுனியா |
| 21 | மல்லாவி மத்திய கல்லூரி | 02-05 மணி | உள்ளூர்சேவை | ஆலங்குளம், வன்னி விளான்குளம் |
| 22 | மல்லாவி மத்திய கல்லூரி | 02. மணி | மல்லாவி-மாங்குளம்-கிளிநொச்சி | கிளிநொச்சி |
| 23 | மல்லாவி மத்திய கல்லூரி | 02. மணி | மல்லாவி-பாலிநகர்- ஒட்டு சுட்டான் | முள்ளியவளை |

குறிப்பு:- மாவீரர் குடும்பங்கள் மட்டும் இச் சேவையில் இணையலாம்.

## பனங்கள்ளிலிருந்து வெல்லம் தயாரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனங்கள்ளில் இருந்து வெல்லத் தயாரிப்பினை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களினது நிதியுதவியுடன் இதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க கொத்தணியினர் தெரிவித்தனர்.

இத் திட்டத்தின் அடிப்படையில் பிரதேச ரீதியாக வெல்லத் தயாரிப்புக்கள் இடம்பெறவுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்படும் வெல்லங்களை ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. (33)

## முன்னணி காவல் நிலையை அகற்றிய பகுதியில் 'கள்' சீவுவதற்குப் படையினர் தடை

### -3000 தொழிலாளர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை, புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஏழாலை ஆகிய பிரதேசங்களில் இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலய முன்னணிக் காவல் நிலையங்களை அண்டியுள்ள பிரதேசங்களில் உள்ள பனைமரங்களில் ஏறி "கள்" சீவுவதற்கு இராணுவத்தினர் முற்றாகத் தடை விதித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் உள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளுள் நிலை கொணடுள்ள படையினரது பாதுகாப்பினை கவனத்தில் கொண்டும் இப்பகுதிகளில் உள்ள காவல் நிலைகளை எல்லையாகக் கொணடு அமைக்கப்பட்டுள்ள வலிகாமம் வடக்கு இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயப்பிரதேசத்தினது பாதுகாப்பினையும் கவனத்தில் கொண்டே படையினர் இவ்வாறு தடைவிதித்துள்ளனர்.

இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த 3000 சீவல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக வலிகாமம் வடக்கு பனை, தென்னை வளக் கொத்தணியினர் தெரிவித்துள்ளனர். (33)

# கல்லறையில் துயினும் எங்கள் காவல் தெய்வங்களைப் போற்றுவோம்

தமிழீழத்தில் பிரதான வீதிகள் உள்ளிட்ட மூலைமுடுக்குகள் எங்கணும் சிவப்பு-மஞ்சள் கொடிகள் பெருந்தெருக்களில் ஆங்காங்கே அலங்கார வளைவுகள், மாவீரர் நினைவுப் பந்தல்கள் மக்களின் மனங்களிலும் ஒரு புத்துணர்ச்சி. ஒரு இனத் தின் பாரம்பரிய விழாக்களுக்கும் மேலான அலங்காரங்கள் ஏற்பாடுகள் அத்தகைய நிகழ்வு எதற்காக? யாருக்காக?

இவை மாவீரர் தினத்துக்காக யார் இந்த மாவீரர்கள்? உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக சகல உரிமைகளையும் பெற்று வாழும் நிலைவரும் போதே அதனை சனநாயகம் என்று கூறலாம். உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக வாழ இந்த நூற்றாண்டில் உலகில் எந்த ஒரு சமூகமும் விரும்புவதில்லை. மறுக்கப்பட்ட உரிமைகளையும் சுதந்திரத்தையும் வேண்டி நிற்பது அவ்வச் சமுகத்தினதும் கடமையாகும். இதனைச் சாத்வீகமாகப் பெற முடியாத போதே மக்கள் கிளர்ந்தெழுவர்.

இவ்வாறு பல சாத்வீகப் போராட்டங்களை இம் மண்ணில் வாழ்ந்த நம் முன்னோர் நடத்தி நின்றனர். அது கைகூடாத போது பொங்கியெழுந்த தலைவன் வழிகாட்டலில் களமாடியவர்களே இம்மாவீரச் செல்வங்கள்.

அந்நியனின் படையெடுப்புக்களால் சொல்லொணாத் துயரங்களைத் தமிழினம் சந்தித்தது. மக்களின் அன்றாட வாழ்க்கை சீரழிந்தது சோதனைக் கெடுபிடிகள், தொழிலுக்கு, கடத்தெருவிற்குச் சென்றோர் காணாமல் போயினர். எங்கு பார்த்தாலும் வேட்டொலிகளும் குண்டுச்சத்தங் களும் இதுவே மக்களின் வாழ்க்கையாகிப் போனது. நெற் களஞ்சியங்களாக பெயர் பெற்ற விளை நிலங்கள் அந்நியப்படைகளின் முகாம்களா கின, பெண்கள் அச்சமின்றி உலாவித்திரிய முடியாது போனது. இந்தளவு பாரிய துன்ப துயரங்களைத் துரத்திவிடவும் அந்நியப்படைகளை வேரறுக்கவும் உதித்தவர்களே மாவீரர்கள்.

உலகம் நாகரிகமடைந்துள்ள நிலையில் அடுத்தவரைப் போல் உண்டு உடுத்தி, உறங்கி எழ, வெளிநாடு சென்று சுகபோகம் அனுபவிக்க, குடும்பவாழ்க்கையில் ஈடுபட அவர்களும் விரும்பாதிருக்க ஒரு நியாயமும் கிடையாது. ஆனால் அவர்கள் நேசித்ததெல்லாம் அடுத்துவரும் சந்ததியினராவது மேற்சொன்ன உரிமைகளோடும், சுதந்திரத்தோடும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்பதையே. அதற்காகவே அவர்கள் தம் இன்னுயிரை ஈகம் செய்துள்ளனர்.

பொதுவாகவே ஒருவர் தனது உயிர் போய்விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாகஇருப்பார். விபத்துக்களில் சிக்கக் கூடாது, இராணுவத்தினரின் துப்பாக்கிக்கு இரையாகக் கூடாது என்றெல்லாம் நினைத்து உயிரைக் கட்டி வைத்திருக்க முயல்வார். ஆனால் தனது உயிரை குறிப்பிட்ட மணித்தியாலத்துக்கு, குறிப்பிட்ட நிமிடத்துக்கு ஈகம் செய்தவர்கள் மானிடர் இல்லை. மாதெய்வங்கள். ஒருவேளை அல்லது இருவேளை உணவின்றி இருக்கலாம். பன்னிரு நாட்கள் உணவின்றி நீருமின்றி உடலை உருக்கி ஈகம் செய்ய முடியும் என்று நிரூபித்த தியாகி திலீபன் அவர் வழியில் ஒரு மாதம் உணவின்றி வல்லாதிக்கத்துடன் போராடிய அன்னை பூபதி இவர்கள் நினைத்தது தம் பசியையும் தாகத்தையுமல்ல தமிழர்கள் அனைவரினதும் சுதந்திரதாகத்தையும் உரிமைப் பசியையுமே.



குடிமனைக்குள் இராணுவம் புகுகின்றது என்ற உடனேயே மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறுவோர் குண்டு வீச்சு விமானங்கள் இரைவதைக் கேட்டவுடன் கதி கலங்குவோர் எனப் பலர். இவற்றை துச்சமென மதித்தவர்கள் மாவீரர்கள் சிறந்த பயிற்சி, துணிவு, புத்திசாதுரியம் இவற்றையணி கலன்களாகக் கொண்டவர்கள் மாவீரர்கள்.

எதிரிப்படை, ஈ,எறும்பு புகாதபடி அடைத்து வைத்து கண்ணில் எண்ணெய்யை விட்டுக் கொண்டு அல்லும் பகலும் காவல் காத்த பாரிய படைத்தளங்கள் முகாம்கள் இவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து எதிரியை ஓடோட விரட்டியவர்களை மானிடர் என்று கூறலாமா?

எத்தனை பாரிய படை முகாம்கள், எத்தனை தூர வீச்சுக் கொண்ட எறிகணைத் தளங்கள், எத்தனை கவச வாகனங்கள், எத்தனை இரும்புப் பறவைகள் எங்கே அவை? அவற்றை அழித்துவிட்டல்லவா மாவீரர் அறிதுயில் கொள்கின்றனர். அவர்களைக் கொண்டாட இந்த ஒரு நாள் போதாது.

ஏறக்குறைய லெப். சங்கர் முதலாவது மாவீரர் ஆவதற்கு முன்பு வரை சிங்கள இராணுவமும் ஆட்சியாளரும் தமிழரை அழித்து ஒழித்து விடலாம். என்றே கனவு கண்டிருப்பர். அதனை தலைகீழாக மாற்றியமைத்த பெருமை மாவீரரையே சாரும். 1983 ஆம் ஆண்டுக்கு முன்பு சிங்கள இராணுவம் தமிழர் தாயகத்தில் உல்லாசமாகத் திரிந்தது. 83 ஜூலை 13ஆம் திகதி திருநெல்வேலி தாக்குதலோடு எதிரியின் உல்லாசப் பயணம் ஆப்பு வைக்கப்பட்டது. அதன் பின்பு மாவீர்களை வளர்த்தெடுத்து தமிழரைத் தலை நிமிர்ந்து நடக்க வைத்த தலைவனின் தீர்க்கதரிசனத்தால் எதிரி நிலை கொண்டிருக்க முடியாத நிலையை மாவீரர்கள் ஏற்படுத்தினர். கரந்தடித்தாக்குதலா, முற்றுகைத் தாக்குதலா, வழிமறிப்புச் சமரா, மரபு வழிச்சமரா மறைந்த மாவீரர்களுக்கு அனைத்தும் புரிந்தவையே.



தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பல தடைக் கற்களை பல சோதனைகளைச் சந்தித்த வேளை கடலிலாயினும் தரையிலாயினும் அவற்றைத் தகர்த்து திருப்புமுனைகளை ஏற்படுத்தியவர்கள் மாவீரர்கள்.

யாழ். மண்ணை விட்டு விடுதலைப்புலிகள் வெளியேறி முல்லை மண்ணை மீட்டெடுத்த காலம் யாழிலிருந்து இடம் பெயர்ந்த பல இலட்சம் மக்கள் வன்னியில் தஞ்சமடைந்திருந்தனர். எதிரி மேலும் தனது ஆக்கிரமிப்பை வெளிக்காட்ட வன்னி மீது படையெடுத்தான். இது மக்களுக்கு இனி என்ன செய்வது எங்கு செல்வது என்ற ஏக்கத்தைக் கொடுத்தது.

பசி, நோய், குடியிருக்க இடமின்மை சொல்லொணாத் துன்பம் அனுபவித்த காலம் அத்துடன் கண்டி வீதியூடான பெரும் படையெடுப்பு ரத்வத்தையின் கூற்றுப்படி 95 புலிகள் அழிக்கப்பட்டுவிட்டனர். இன்னும் 5 வீதத்தினரே உள்ளனர். அவர்களும் அழிக்கப் பட்டு விடுவர். இனிப் புலிகளுமில்லை போராட்டமுமில்லை தமிழர்கள் அடிமையாகி விடுவர் என்பது அரசின் கணிப்பு.

வெற்றி நிச்சயம் படை நடவடிக்கையை ரத்வத்தவின் படைகள் ஆரம்பித்தன. பாரிய ஏற்பாடுகள் பல அதி நவீன ஆயுதங்கள் குண்டு வீச்சு விமானங்கள்,கவச வண்டிகள் ரத்வத்தவின் கூற்றுப்படி 5 வீதமான விடுதலைப்புலிகளை அந்தளவு ஏற்பாடுடன் எதிர்த்துப் போராடி சுமார் 30 மைல் தூரத்தைக் கடக்க இரு வருடங்களுக்கு மேல் எடுத்ததுசிங்களப் படைக்கு. அத்தனையும் துணிச்சலுடன் எதிர்த்துப் போராடிய வீரர்கள் மாவீரர்களா? காவல் தெய்வங்களா? எதிரி எவ்வாறேனும் அத்து மீறி தமது தாயக மக்களை மேலும் துன்பத் துக்குள்ளாக்க விடக் கூடாது என நினைத்து தன்னுயிரை ஈந்தவர்களை என்னவென்றுசொல்ல.

தானைத் தலைவனின் உயர்ந்த இலட்சியத்தையும், தூர நோக்கத்தையும் தலைமேற்கொண்டு போராடிய வீரர்கள் இப்போது துயிலுகின்றனர்.

துயில் கொள்ளச் சென்றவர்களின் பணியை தோழர்கள் வி[illegible]டவில்லை. எதிரி இரு வருடங்களாக[illegible]ராடி பெற்ற நிச்சயமற்ற வெற்றியை தமது நிச்சய வெற்றியாகக் கொள்ள எடுத்த காலம் வெறும் 3 நாட்கள் மட்டுமே இவர்களை மகாதெய்வங்கள் என்று கூறாமல் மாவீரர்கள் என்று மட்டும் கூறினால் போதுமா? உறுதியான மனம், தாயகப்பற்று, தந்திரோபாயம் இவை அவர்களுக்கு எங்கிருந்து வந்தன? என்றுமே அசைக்க முடியாத தளம் என இறுமாந்திருந்த சிங்கள ஆட்சியாளர்களினதும்,இராணுவத்தினதும் ஆனையிறவுப் படைத்தளம் அடிமை வரலாற்றுச் சின்னம் அதன் வரலாற்றை மாற்றியவர்கள் நமது மாவீரர்கள்.

அப்போது கைவிடப்பட்ட குடியிருப்புக்கள் விளை நிலங்கள் இப்போது தமிழர் வசம். ஆக்கிரமிப்பாளரையும், ஆட்சியாளரையும் கதிகலங்கச் செய்து சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுக்கள் நடத்தத் தூண்டியவர்கள் மாவீரச் செல்வங்கள். சொந்த மண்ணில் மாணவர்களை. கல்வி பயில வைத்த தத்தமது இடங்களில் மக்கள் மீண்டும் குடியமர்ந்து நிம்மதியாய் வாழ ரத்வத்த திறக்க நினைத்து முடியாது போன ஏ-9 பாதையை திறந்து விடச் செய்த மாவீரர்கள்.

இப்போது அதே தெருக்களிலும் வீதிகளிலும் வீடுகளிலும் துயிலுமில்லங்களிலும் அலங்காரங்கள், தோரணங்கள் அற்புதங்கள் இவற்றை எல்லாம் பெற்றுத் தந்து மாவீரர்கள் கல்லறைகளில் உறங்கவில்லை. அவர்கள் மீண்டும் எம்மைக் காக்கின்றனர். அவர்களை காவல்த் தெய்வங்களாகப் போற்றி அவர்களின் பணி தொடர இந்நாளில் அனைவரும் உறுதி எடுப்பது எமது கடமை.

**வடிவேல்**




## மாவீர வேங்கைகளே!

மண்மகள் மடிமீது
துயில்கின்ற சோதரரே!
மாவீர வேங்கைகளே
என்றென்றும் எம்முள்
வாசம் செய்யும் ஜீவன்களே!
நாம் தினம் வணங்கிடும் தெய்வங்களே!
தமிழர் நல்வாழ்வுக்காய் ஒளிர்கின்ற தீபங்களே!
தமிழர் உறவுக் கொடியில் பூத்து
வாசம் வீசும் மலர்களே!
தாயக வானமதில்
வெண்ணிலவாய் தாரகையாய்! இருளகற்றி ஒளி
கொடுக்கும் உயர்ந்த பெரும் சுடர்களே! காலமிட்ட
கட்டளையை
கையேற்று நீர் நடந்தீர்
எங்களுக்காய் உம் வாழ்வின் வசந்தங்களை நீர்
துறந்தீர் விழிமூடி கல்லறையில் இன்று நீர்
துயின்றிடினும்
காலத்தால் அழியாது
உயிர்வாழும் உம் நாமம்
உங்கள் பணி கையேற்று நடந்திட நாம் உள்ளோம்
அமைதியாய் நீர் உறங்கும்
தேசம் விரைவில் விடிவாகும்.

இளையவன் வன்னியூர்
க.அன்பழகன்

## கல்லறைக் காவியங்கள்

எம் தாயகத்தைக் காக்க உங்கள்
தேகத்தையே வித்தாக்கிய தியாகச் செம்மல்களே
உங்கள் தாழ் பணிந்து செப்புகின்றேன்.
இங்கு ஓர் கவிராக மாலை தனை
ஒன்றாய்ப் பத்தாய் நூறாய்க் கல்லறையில்
உறங்குகின்ற காவிய நாயகர்களே!
சொந்தம் பந்தம் பாசம் பற்று என
எல்லாவற்றையும் துறந்த இளம் துறவிகளே!
எமது துன்பமெனும் இருளகற்ற
தீயாய் எரிந்த தியாக தீபங்களே!
கறுத்த வரி அணிந்து களமாடிப் பகை வென்று
மீளாத் துயிலில் மூழ்கிக் கிடக்கும்
அற்புத விருட்சங்களே!
தியாக வேள்வியில் ஆகுதியாகிய தியாகதீபங்களே!
உங்கள் தியாக உயிர்கள் பல விதைக்கப்பட்டிருக்கா விட்டால்
சுவாசிப்பதற்கு கூட எமக்கு சுதந்திரமில்லை
எங்கள் மாவீரர்களே!
உன்னதங்களை உயிர்ப்புடன்
உலவச் செய்த உங்களின்
அரும் பெரும் புகழதனைப் பாடிட
ஏனோ இதற்கு மேல் என்னிடம் வார்த்தைகள் இல்லை.
ஏனெனில் நீங்கள் எழுதாத
இலட்சியங்களைப் புரிந்து கொண்ட
தற்கொடையாளர்களே!
இக்குவலயம் உள்ள மட்டும்
உங்களின் மகத்தான தியாகம்
என்றென்றும் நிலைத்திருக்கும்
மாசற்ற மாவீரர்களே!
உங்கள் கல்லறையில் விடுதலைக்
கீதம் இசைக்கும் ஒலி என்றென்றும்
எம் செவிகளில் ரீங்காரமிடுகின்றன.

நிர்மலா
நரேந்திரன்



## மா(று) வீரர்

மனிதப் பிறப்பெடுத்த
மகான்கள் ஆனவர்கள்
மரணித்தும் வாழ்கின்ற
மறக்குலத்தின் தவப்புதல்வர்

தேசத்தை காப்பதற்காய்
தேகத்தில் வெடி சுமந்தார்
வேகம் கொள் புலிகளாகி - தியாக
வேள்வித்தீயில் குளித்து நின்றார்.

தாய்மண் காப்பதற்காய்
தந்தார்கள் தம் உயிரை
தமிழர்தாய் பெற்றெடுத்த
தங்கத் தமிழ் வீரரிவர்

உடல் வெடித்து பகையழித்த
உன்னத தியாகி இவர்
உயிர் பிரியும் வேளையிலும்
உரிமை தமிழீழம் என்றவர்கள்

விடுதலைப் பயிர் வளர்த்த
விலையிலா மாணிக்கக்கற்கள்- தாம்
வீழ்ந்த மண்ணில் உயிர் பெற்ற
வியத்தகு மனிதர்கள்.

முத்தையனூர் ப. துஸ்யந்தன்

# மாவீரர் நினைவாக...




திருகோணமலையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு...





கிளிநொச்சியில் மாவீர்தின அலங்கார வளைவுகள்... (படங்கள்:- குகன்)



நுணாவிலில்...



பளையில்...



(படங்கள்:- செல்வா) முகமாலையில்...




(படங்கள்:- தவரட்ணம்) விசுவமடு தேராவில் துயிலுமில்லத்தில் சிரமதானம்



கொடிகாமம் துயிலுமில்லத்தில் மாவீரர் நினைவுநாள் ஒழுங்கு குறித்து விளக்கல்..




கொடிகாமம் ப.நோ.கூ. சங்கத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு... (படங்கள்:- ஆன்சலின்)

# அரச ஊழியர் வீடமைக்க மகாவலிப் பிரதேசத்தில் காணி

## பாராளுமன்றத்தில் அறிவிப்பு

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு மகாவலிப் பிரதேசத்தில் காணிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் 50 ஆயிரம் அரச ஊழியர்களுக்கு தலா 20 பேச் காணிகள் வழங்கப்படும் என ரஜரட்டை அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். வரவு- செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் 4ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் எதிர்வரும் வருடத்தின் முதல் 6 மாதத்துள் இந்த காணி வழங்கு வதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாகும் எனவும் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சி சார்பில் விவாதத்தை ஆரம்பித்த ஐக்கியதேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வரவு -செலவுத்திட்டத்தில் துண்டு விழும் 162 பில்லியன் ரூபாவை எவ்வாறு ஈடுசெய்வதென்ற திட்டம் அரசாங்கத்திடம் இல்லை எனக் குற்றம் சாட்டியுள்ளார். (32)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்தலும்

**26.10.2004 ஆம் ஆண்டு சிவபதம் அடைந்த எனது தாயாராகிய திருமதி பெரியான் ஐயம்மா என்பவரது மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்ற வர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு அத்துடன் எனது தர்மபுரம் வீட்டிற்கு வந்து அனுதாபம் தெரிவித்த தர்மபுரம் வைத்தியஅதிகாரி திரு.தர்மலிங்கம் அவர்களுக்கும், சக ஊழியர்களுக்கும், பொது மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு 27.11.2004 சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.**

தகவல்:
மகன் P.சுதர்சன்
7 ஆம் யுனிற்
தர்மபுரம்

(5296)

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 . 07 . 1968



இறப்பு 06 . 08 . 1988

## லெப்.விக்டர்

ஞா.விக்ரோறியன் நேசராஜா
திருநகர், கிளிநொச்சி

வயவையில் பிறந்து
வன்னி மண்ணில் வரலாறாகிய எம் நேசா.
ஆண்டுகள் பதினைந்து சென்றாலும் – உமது
மழலை முகம் எம்மை விட்டு நீங்காது நேசா.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

[5300]

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



## இராசையா தியாகலிங்கம்

கடந்த 28.09.2004 அன்று இறைவனடி சேர்ந்த இராசையா தியாகலிங்கம் என்பவரின் சபிண்டீகரண வைபவம் 28.10.2004 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் தவிர்க்க முடியாத காரணத்தினால் வைபவம் நடைபெறவில்லை. இவ் வைபவம் நடைபெறவில்லை. இவ் வைபவம் மீண்டும் 26.11.2004 அன்று எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் சமுகம் தந்து அன்னாரின் ஆத்மாசாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(5302)

இல.100 டி,10
உருத்திரபுரம் மேற்கு

மனைவி, பிள்ளைகள்

# க.வ.ப.நோ.கூ. சங்கம், பரந்தன், வ/து கிளைக்குழுத் தேர்தல் - 2004

# அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடக்கு கிழக்கு)அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் 1998.05.19ஆம் திகதி1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடகிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக ஒழுங்குகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**காலம்:- 2004.12.04 ஆம்திகதி சனிக்கிழமை**

**நேரம் :- முற்பகல் 09.30 மணி**

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 01. | பரந்தன் | தலைமை அலுவலகம், க.வ.ப.நோ.சங்கம்,பரந்தன் |
| 02. | 10. | உமையாள்புரம் | தலைமை அலுவலகம், க.வ.ப.நோ.சங்கம்,பரந்தன், |
| 03. | 04. | ஊரியான் | முருகானந்தா மகாவித்தியாலயம், |
| 04. | 17. | கல்மடுநகர் | கல்மடு அ.த.க.பாடசாலை, கல்மடு, |
| 05. | 15. | தருமபுரம் | தருமபுரம் வெதுப்பக வளாகம், |
| 06. | 09. | புன்னைநீராவி | புன்னைநீராவி அ.த.க.பாடசாலை, |
| 07. | 16. | பிரமந்தனாறு | பிரமந்தனாறு மகாவித்தியாலயம், |
| 08. | 08. | கலவெட்டித்திடல் | நாகேஸ்வரா வித்தியாலயம், கலவெட்டித்திடல், |
| 09. | 07. | புளியம்பொக்கணை | நாகேந்திரா வித்தியாலயம், புளியம்பொக்கணை, |
| 10. | 14. | பொறிக்கடவை | பரந்தன் அ.த.க.பாடசாலை |
| 11. | 12. | தட்டுவங்கொட்டி | கண்ணகி நகர், அ.த.க.பாடசாலை, |
| 12. | 02. | இரணைமடு மேற்கு | முரசுமோட்டை றோ.க.பாடசாலை, முரசு, |
| 13. | 13. | குமரபுரம் | பரந்தன் இந்து மகா வித்தியாலயம், பரந்தன், |

**காலம்:- 2004. 12. 04 ஆம் திகதி சனிக்கிழமை**

**நேரம் :- பிற்பகல் 01.00 மணி**

| | | | |
|---|---|---|---|
| 14. | 11. | ஆனையிறவு | தலைமை அலுவலகம், க.வ.ப.நோ.கூ.ச.பரந்தன், |
| 15. | 03. | முரசுமோட்டை | முருகானந்தா மகாவித்தியாலயம், முரசுமோட்டை, |
| 16. | 05. | கண்டாவளை/ பன்றிசுட்டான். | கண்டாவளை மகாவித்தியாலயம். |

**முக்கிய குறிப்புகள்:-**

01. வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு தனித்தனி அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த அறிவித்தலை சொந்த அறிவித்தலாகத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.
02. இது சம்பந்தமான மேலதிக தகவல்களை கிளைநிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

செயலாளர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச.
பரந்தன்.

(சி-10776)

# அசாம் மாநில இறையாண்மைப் பிரச்சினை

# மன்மோகன் சிங் நிலைப்பாட்டிலும் மாற்றமில்லை

## உல்ஃபா தீவிரவாத அமைப்பு கருத்து

(குவாஹாட்டி)

அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியின் (உல்'பா) கோரிக்கை தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ள கருத்துகளில் புதிதாக ஏதும் இல்லை என்று உல்'.பா அமைப்பு கூறியிருக்கிறது.

இறையாண்மைப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு அரசு தயாராக இல்லை என்பதையே அவரது கருத்துக் காட்டுகின்றது. என்று உல்'.பா அமைப்பின் தலைமைத் தளபதி பரேஷ் பருவா கூறியிருக்கின்றார்.உள்ளூர்ப் பத்திரிகையொன்றுடன் திங்கட்கிழமை இரவு தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஒருவர் தன்னை பரேஷ் பருவா என அறிமுகம் செய்து கொண்டு இத் தகவலைத் தெரிவித்துள்ளார். இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியே அசாம் என்று மன்மோகன் கூறியுள்ளார். எனவே இறையாண்மை பிரச்சினை குறித்துப் பேச அரசு தயாராக இல்லை என்பது அதிலிருந்து தெரிகிறது. அது எதிர்பாராத கருத்தும் அல்ல. ஏற்கனவே இருந்த பிரதமர்கள் கூறிய கருத்திலிருந்து வேறுபட்டதுமல்ல என்று பருபா கூறியுள்ளார்.



திருச்சி ரயில் நிலைய அதிகாரிக்கு ஜெயேந்திரரை விடுதலை செய்யாவிடில் குண்டு வெடிக்கும் என்ற எச்சரிக்கை வந்ததை யடுத்துஅங்கு தீவிர சோதனைநடவடிக்கைமேற்கொள்ளப் பட்டுவருகிறது.

# ஜெயேந்திரரை விடுதலை செய்யக்கோரி வேலூர் சிறை முன் உண்ணாவிரதப் போராட்டம்!

## விஷ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாடு

கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஜெயேந்திரர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரை விடுதலை செய்யக்கோரி விஷ்வ ஹிந்து பரிஷத் மற்றும் இந்து அமைப்புக்கள் போராடி வருகின்றன. ஜெயேந்திரர் விடுதலையாகும் வரை வேலூர் சிறையில் முன்பு தினமும் 1000 பேர் வீதம் உண்ணாவிரதம் இருக்க விஷ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக விஷ்வ ஹிந்து பரிஷத் அகில உலக துணைத் தலைவர் வேதாந்தம், மாநில பொதுச் செயலாளர் நாராயணசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தினமும் சிறைவாசலில் உண்ணாவிரதம் இருந்து ஜெயேந்திரரின் விடுதலைக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும். இதற்காக தினமும் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஆயிரம் பக்தர்கள் வர வேண்டும். சோதனை மிகுந்த இந்தக் காலகட்டத்தில் எவ்வித பாகுபாடும் இல்லாமல் அனைத்து இந்துக்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் இன்று முதல் தொடங்குகிறது. தினமும் நடைபெறும். இந்த உண்ணாவிரதத்தை விஷ்வ ஹிந்துபரிஷத் நிர்வாகிகள் தொடங்கிவைக்கிறார்கள். பா.ஜனதா, ஹிந்து முன்னணி உள்ளிட்ட இந்து அமைப்புக்கள் இந்தப்போராட்டத்தில் பங்கேற்கின்றன.

# ஜெயேந்திரர் கைதையடுத்து மடாதிபதிகள் கலக்கம்

(புதுடில்லி)

கோவில் நிர்வாகி கொலை வழக்கில் காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதனால் இந்தியா முழுவதிலும் உள்ள மடாதிபதிகள் பெரும் கலக்கத்தில் உள்ளனர்.

தங்களது மடங்கள் அரசுடைமை ஆக்கப்பட்டு விடுமோ என்ற அச்சமும் நிலவி வருகிறது.இந்த நிலையில் மடங்களைப் பாதுகாப்பது பற்றி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த மடாதிபதி ஸ்வரூபா நந்தேந்திர சரஸ்வதி மகாசுவாமி ஆலோசனை நடத்தி வருகிறார். இது பற்றி அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

மடாதிபதி ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டிருப்பது எங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இதனால் மடங்கள் அனைத்தும் பாது காப்பற்ற ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மடாதிபதியான எனக்கு சட்டத்தின் மீது முழு நம்பிக்கை உள்ளது. ஆனால் அரசியல் வாதிகள் மீது துளி அளவு கூட நம்பிக்கை இல்லை.

ஜெயேந்திரர் கைது செய்யப்பட்ட பிறகு மடாதிபதிகளிடையே ஒருவித பீதி நிலவி வருகிறது. அதனால் மடங்களைப் பாதுகாப்பது பற்றி ஆலோசனை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இதற்காக ஐதராபாத்தில் சனவரி மாதம் 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை மடாதிபதிகள் மாநாடு நடத்த உள்ளோம். இதில் நாடு முழுவதிலும் இருந்து 30 மடாதிபதிகளும், 30 ஆயிரம் வேதபண்டிதர்களும் கலந்து கொள்கிறார்கள் என்று கூறினார்.

# விண்வெளியில் குடியிருப்பு; அப்துல் கலாம் விருப்பம்

"விண்வெளியில் விரைவில் குடியிருப்பு ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசரத்தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம்" என்று இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கூறினார்.

,ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் 'சந்திரனின் பயன்பாடு மற்றும் ஆய்வு' என்ற தலைப்பில் 5 நாள் மாநாடு நேற்று முன்தினம் தொடங்கியது.

அப்துல் கலாம் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசியதாவது;

விண்வெளியில் குடியிருப்பு ஒன்று அமைக்க வேண்டிய அவசரத்தேவை ஏற்பட்டுள்ளது. சந்திரனுக்கு மேலேயோ அல்லது பூமிக்கும், சந்திரனுக்கும் இடையிலோ இந்தக் குடியிருப்பு அமைக்கப்பட வேண்டும். இதற்கு உலக நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும்.

சந்திரனில் தாதுக்கள் இருப்பது குறித்து ஆய்வுகள் நடந்து வருகின்றன. 2007ஆம் ஆண்டு இந்தியா மேற்கொள்ளவுள்ள சந்திரன் ஆய்வுத் திட்டமான 'சந்திராயன்-1' பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும். சந்திரனின் தன்மைகள் குறித்தும் விஞ்ஞானிகள் மேலும் பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு கலாம் பேசினார்.

# இந்தியாவிற்குள் சட்ட விரோதமாக நுழைந்த 6 ஆயிரம் பங்களாதேஷ் நாட்டவர் கைது

(புதுடில்லி)

பங்களாதேசிலிருந்து இந்தியாவிற்குள் ஊடுருவிய ஆறாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்கதேசத்திருந்து இந்தியாவிற்குள் ஊடுருவல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. எல்லை வழியாக இந்திய பகுதிக்குள் ஊடுருவிய பல மாநிலங்களில் மறைந்து வாழ்ந்த ஏராளமான வங்க தேசத்தினரை அம் மாநில பொலிசார் பிடித்து எல்லைப் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைத்து வருகின்றார்கள். அந்த அடிப்படையில் கடந்த சனவரி மாதம் முதல் ஒக்டோபர் வரையிலான காலத்தில் மேற்கு வங்கம்,மகாராஷ்டிரா, டில்லி, உத்தர பிரதேசம், பஞ்சாப், அரியானா, பீகார், குஜராத், காஷ்மீர், சண்டிகார், ஒரிசா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சட்ட விரோதமாக தங்கியிருந்த வங்க தேசத்தினர் ஆறாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் இந்தியாவிற்குள் ஊடுருவிய வங்கதேசத்தவர்களின் எண்ணிக்கை ஒன்பது ஆயிரம். இத்தகவலை இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை டி.ஐ.ஜி அக்ரவாலா தெரிவித்துள்ளார்.

# மத்திய அமைச்சரவையில் சேருவேன்

## -சிபுசோரன் நம்பிக்கை

(புதுடில்லி)

"மீண்டும் மத்திய அமைச்சரவையில் சேருவேன்" என்று முன்னாள் அமைச்சர் சிபு சோரன் கூறியுள்ளார். ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் பேரணியொன்றில் முன்னாள் அமைச்சர் சிபுசோரன் பேசுகையில், மாநிலத்தில் நடக்கவுள்ள சட்டசபைத் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்றால், "மாநிலத்தை தலைமையேற்று நடத்திச் செல்லும் பொறுப்பை எனக்கு வழங்க வேண்டும். தற்போதுள்ள அரசைவிட மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வேன். மத்திய அமைச்சரவையில் விரைவில் சேருவேன். ஆனால் அதே அமைச்சகப் பொறுப்பு எனக்கு மீண்டும் வழங்கப்படுமா என்று சொல்ல முடியாது" என்றார். படுகொலை வழக்குத் தொடர்பாக ஜம்தாரா நீதிமன்றம், பிணையில் வெளிவர முடியாத கைது உத்தரவை பிறப்பித்தது. இதைத் தொடர்ந்து நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சராக இருந்த சிபுசோரன் தனது பதவியை ராஜினாமா செய்தமை தெரிந்ததே.



முதுமலை முகாமில் குரங்குகளின் தொல்லையால் மயிலாடுதுறை மயூர நாதசுவாமி கோவிலைச்சேர்ந்த அபயம்மாள் என்ற யானை மிரண்டு மதியழகன் என்ற யானைப்பாகனின் உதவியாளனை தும்பிக்கையால் தூக்கி வீசியது. இதில் காயமடைந்த அவர் சிகிச்சை பெறுகின்றார்.

தானைத் தலைவனுக்கு 50 ஆவது வயதினிலே
தாய்க்குலத்தின் வாழ்த்துக்கள்



தமிழீழப் பெண்களை தலைநிமிர
வைத்தவரே நீர் வாழ்க!
தானைத் தலைவனே தமிழ்
ஈழமண்ணின் வீரமைந்தனே
நீடூழி நீர் வாழ்கவே
பூமிப் பந்திலே தமிழ் ஈழம்
எனும் புள்ளியை இட்டிடவே
கிளந்தெழுந்த நாயகனே

வாழ்த்துகின்றோம் உம்மை
வாழ்க வாழ்கவென்று
வாயார வாழ்த்துகின்றோம் அன்னையர் நாம்
வண்ணத் தமிழினத்தின்
விடுதலைக்காய் உழைத்திடும்
உம் ஆயுள் நீண்டிட
நலமாய்
நீவீர் வாழ இறை ஆசி
தனை உளமுருக வேண்டியே
வாழ்த்துகிறோம் அன்னையர் நாம்
வாழ்க வாழ்கவென
வாழ்த்தும்

(5292)

முழங்காவில் பிரதேச
பெண்கள் அமைப்புக்கள்.

## நமிபியாவிற்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டி இங்கிலாந்து அணிக்கு 7 விக்கெட்வெற்றி



நமிபியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி தனது இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் வெற்றியைப் பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நமிபியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 219 ஓட்டங்களைப் பெற்றது. 75 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்திருந்ததாயினும் பின்னர் வந்த வீரர்கள் அவதானமாக ஆடி 219 ஓட்டங்கள் வரை கொண்டு சென்றனர்.

பதிலுக்கு 220 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கி ஆடிய இங்கிலாந்து 3 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

அவ்வணியின் விக்ரம் சோலங்கி 82 ஓட்டங்களையும் இயன் பெல் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

மைக்கல்வோன்,அன்ருஸ்ரோஸ், டரன்கோ, ஆகியோர் இப் போட்டியிலிருந்து விலகியிருக்க ஆஸ்லி கைல்ஸ் அணியை வழிநடத்தினார்.

## பயிற்சியாளர் பணி தற்போது இல்லை –ஸ்ரீவ்வோ

இந்தியா அல்லது அவுஸ்திரேலிய கிரிக்கெட்அணிக்குப் பயிற்சியாளராக உடனடியாக பணியாற்றும் எண்ணம் எதுவும் தமக்கு இல்லை என்று முன்னாள் ஆஸி தலைவர் ஸ்ரீவ்வோ தெரிவித்தார்.

ஏற்கனவே ஒப்புக்கொண்ட வேலைகள் எனக்கு நிறைய உள்ளன. சில சமூக, தன்னார்வத் தொண்டு நிறுவன சேவைகள் உள்ளன. அதை முதலில் முடிக்க வேண்டும்.

அப்படியே அழைப்பு வந்தாலும் அந்த நேரத்து சூழ்நிலையைப் பொறுத்து முடிவெடுப்பேன்.என்றார்

## புதிய ஒப்பந்தங்கள் எதிலும் கைச்சாத்திடப் போவதில்லை




அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரபல வேகப்பந்துவீச்சாளரும் பயிற்றுனருமான டெனிஸ்லிலி தான் புதிய ஒப்பந்தங்கள் எதிலும் கைச்சாத்திடப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

தனது பணிக்காலத்தை வருடமொன்றிற்கு 30 நாளிலிருந்து 15 நாட்களாகக் குறைக்கவும் கொடுப்பனவை குறைக்கவும், அவுஸ்திரேலிய கிரிக்கட்சபை தீர்மானித்திருப்பதால் இந்த முடிவை எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

லிலி 1971 முதல் 1984 வரை அவுஸ்திரேலிய அணிக்காக 70 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 355 விக்கெட்டுக்களைப் பெற்றுள்ளார். அத்துடன் அவர் உலகின் தலைசிறந்த வேகப்பந்து பயிற்சியாளராவார் என முன்னாள் அணித்தலைவர் கிறேக்சப்பல் தெரிவித்துள்ளார்.

ஆயினும் அவுஸ்திரேலிய பயிற்சிக்கல்லூரி பயிற்றுவிப்பாளர்களை மாற்றியமைத்து தற்போதைய நவீன பயிற்றுவிப்பாளர்களை பதவியிலிருத்த முயற்சிப்பதாக கிரிக்கட்சபைத்தலைவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## கான்பூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

## வெற்றி தோல்வியின்றி நிறைவு



இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கான்பூரில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் போட்டி எந்த அணிக்கும் வெற்றி தோல்வியின்றி நிறைவுபெற்றது.

தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸ் 9 விக்கெட்டை இழந்து 510 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்தியது. அன்ருகோல் 163 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் கும்ளே 6விக்கெட்டுக்களைக்கைப்பற்றினார். இந்தியா முதல் இனிங்ஸ் 466 ஓட்டகளில் ஷேவாக் 164 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் அன்ருஹோல், நிதினி ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



தொடர்ந்து 44 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய தென்னாபிரிக்கா 4விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களை பெற்றிருந்த போது, ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. அப்போது டிப்பென்னர் 31 ஓட்டங்களுடனும், கலிஸ் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர். போட்டியின் ஆட்ட நாயகனாக அன்ருஹோல் தெரிவானார்.

## பந்துவீச்சாளர்கள் பிரச்சினையில் ஐ.சி.சி.யின் நடவடிக்கை முட்டாள் தனமானது




சந்தேகத்துக்குரிய பந்து வீச்சாளர்கள் பிரச்சினையில் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) முட்டாள்தனமாக செயற்படுகிறது என்று பாகிஸ்தான் அணி யின் முன்னாள் சகலதுறை வீரர் வாசிம் அக்ரம் கூறியுள்ளார்.

மொகாலியில் நடந்த சிறுவர்களுக்கு இடையேயான சர்க்கரை நோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்தேகத்திற்குரிய பந்து வீச்சாளர்கள் பிரச்சினை குறித்து ஐ.சி.சி. சமீபத்தில் ஆராய்ச்சி செய்து, பந்து வீச்சாளர்கள் தங்களது கைகளை 15 பாகைக்கு வளைக்கலாம் என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

"ஐ.சி.சி.யின் இந்த நடவடிக்கை முட்டாள்தனமானது. இது ஒரு முட்டாள்தனமான கொள்கை முழங்கையை 11 பாகைக்கோ அல்லது 15 பாகைக்கோ வளைக்கக் கூடாது. அவர்களது நடவடிக்கைகள் அறிவு பூர்வமாக இல்லை'' என்றும் அவர் கூறினார்.

மேலும், சந்தேகத்திற்குரிய பந்து வீச்சாளர்கள் பிரச்சினையில் ஐ.சி.சி.அவர்கள் பந்தை எறிகிறார்களா? இல்லையா? என்பதைத்தான் பார்க்கவேண்டும் என்றும், 38வயதான பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வாசிம் அக்ரம் தெரிவித்தார். தவிர, பிரச்சினைக்குரிய ஓப்ஸ்பின்னர் முத்தையா முரளிதரன் விடயத்தில் அவர் அனுதாபம் தெரிவித்தார். "முரளிதரன் ஒரு சிறந்த பந்து வீச்சாளர், சில நேரங்களில் அவரது பந்து வீச்சுக் குறித்து பிரச்சினை ஏற்படுகிறது என்கிறார் அவர். இந்தியாவின் மிதவேகப்பந்து வீச்சாளர் பதானுக்கு பாராட்டுத் தெரிவித்த அவர், தனது ஆரம்ப கட்ட கிரிக்கெட் வாழ்க்கையில் தான் இருந்ததைவிட பதான் சிறந்த வீரராக இருக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.



பாங்கொக்கில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் உலகக் கிண்ணக் கால்பந்து அரையிறுதிப் போட்டியில் அமெரிக்கப் பெண்கள் அணியைத் தோற்கடித்த ஜேர்மனி 19 வயது மகளிர் அணி மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறது. இப்போட்டியில் ஜேர்மனி 3-1 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்தது.

விளையாட்டு

## சூதாட்ட புகாரில் புதிய திருப்பம் பிளெமிங் வழியில் டுகத்ரபால் பதிலடி

சூதாட்ட புகாரில் திருப்பமாக ஸ்டீபன் பிளெமிங் வழியில் பதிலடி தருகிறார் ஆஷிம் கேத்ரபால். ஆம் இவரும் ஒரு புத்தகம் வெளியிட்டு அதிர்ச்சிதரவுள்ளார்.

நியூசிலாந்து தலைவர் ஸ்டீபன் பிளெமிங் தனது சுயசரிதையில் (பேலன்ஸ் ஆப் பவர்) இந்தியகிரிக்கெட் விமர்சகர் ஆஷிம் கேத்ரபால் பற்றி புகார் கூறியிருந்தார்.

அதாவது 1999 இல் இங்கிலாந்தில் நடந்த உலகக் கோப்பைப் போட்டியின்போது, சூதாட்ட ஏஜென்ட்டாக கேத்ரபால் தன்னைத் தொடர்பு கொண்டதாகக் குறிப்பிட்டு இருந்தார்.

சுமார் 2.50கோடி ரூபாவரை இலஞ்சம் தர முன்வந்ததாகவும் பிளெமிங் பகிரங்கமாக எழுதி இருந்தார். இதை அப்போதே மறுத்தார் கேத்ரபால். இப்போது இவரும் ஒரு புத்தகம் வெளியிடுகிறார்கள். 'கிரிக்கெட் அண்டர் தி டேபிள்' என்ற தலைப்பிலான இப்புத்தகம் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் வெளியாகிறது. இதில் பிளமிங்கைச் சந்தித்தபோது நடந்த உண்மை விபரங்களை அப்படியே விளக்கியுள்ளார். இதைத்தவிர சூதாட்ட சர்ச்சை, கிரிக்கெட் வரலாறு இந்தியாவில் போட்டிகளுக்கான 'தொலைக்காட்சி' உரிமை பிரச்சினை உட்பட பல்வேறு ரகசிய விடயங்களைப் பற்றிக்கூறியுள்ளார்.

## வீதிகள், வயல்களில் கொல்லப்பட்ட தமிழர்கள்இன்று விளையாட்டு மைதானங்களில் கொல்லப்படுகின்றனர்

### தமிழீழ விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் பாப்பா



போர்க்காலத்தில் வீதிகளில், வயல்களில் தமிழ் மக்கள் பேரினவாதப் படையினரால் கொல்லப்பட்டனர். ஆனால் தற்போதைய சமாதான காலத்தில் விளையாட்டு மைதானங்களில் விளையாடிக் கொண்டிருக்கும்போது தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுகின்றார்கள். விளையாடும் உரிமை தமிழ் இளைஞர்களுக்கு மறுக்கப்படுகிறது. இது எங்கு போய் முடியுமோ என்பது தெரியவில்லையென ." தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, மாவீரர் நாளை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்ட உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளை கடந்த திங்கள் காலை திருகோணமலை மக்ஹெய்சர் விளையாட்டரங்கில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசியபோது தெரிவித்தார்.

தமிழீழ விளையாட்டுத் துறையின் திருமலை மாவட்டப் பிரிவால் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றது. ஆரம்பத்தில் பொது ஈகச்சுடரை பாப்பா ஏற்றினார். பின்னர் மாவட்ட விளையாட்டு அதிகாரி ஜஸ்டின் பெரேரா, மாவீரர் படத்துக்கு ஈகச்சுடரை ஏற்ற, உதவிக் கல்விப்பணிப்பாளர் ஈஸ்வரதாஸ் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்தார். தமிழீழத் தேசியக் கொடியை திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் ஏற்றினார். திருமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபன் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா மேலும் பேசுகையில்," விளையாட்டுத்துறையில் தமிழீழ இளைஞர்கள் சாதனைகள் படைத்து வருகின்றனர். தடகளத்துறையில் திருகோணமலை மாவட்டத் தமிழ் இளைஞர்கள் சாதனைகள் படைத்து வருகின்றனர். வார இறுதியில், பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட அகில இலங்கை உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாம் பிரிவில் யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகி சாதனை படைத்துள்ளது. ஈழத்தமிழினம் சகலதுறைகளிலும் தனது தனித்துவத்தை உலகில் நிலை நிறுத்த வேண்டும் என்ற அர்ப்பணிப்புடன் எமது தேசியத் தலைவர் செயற்படுகின்றார். மாவீரர்களின் தியாகத்தினால் கிடைக்கும் பெறுபேறுகளை எமது இளைய சமுதாயம் பயன்படுத்த வேண்டும்" என்று கூறினார். அங்குரார்ப்பண நிகழ்வில் விளையாட்டு அதிகாரி எஸ்.விஜயநீதன், திருகோணமலை உதைபந்தாட்ட லீக் செயலாளர் க.யோகரத்தினம் ஆகியோரும் பங்குபற்றினர். (21)

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி கிறிஸ்கெயான்ஸ், ஹரிஸ் நியூசிலாந்து அணியில்



அவுஸ்திரேலியாவுடனான 3ஒருநாள் போட்டிகளிலும் நியூசிலாந்தின் அனுபவமிக்க வீரர்களான கிறிஸ் கெயான்ஸ், கிறிஸ் ஹரிஸ் ஆகியோர் அணியில் இணைக்கப்படுவர் எனத் தெரிய வருகிறது. அவர்கள் உள்ளிட்ட நியூசிலாந்து கிரிக்கெட் அணி கடந்த 12 மாதகாலமாகப் பலம் பொருந்திய அணியாகக் காணப்படுகின்றது.

கெயான்ஸ், ஹரிஸ் ஆகியோர் துடுப்பாட்டத்திலும் களப்பணியிலும் சிறந்து விளங்குகின்றனர். ஹரிஸ் 249 ஒருநாள் போட்டிகளிலும் கெயான்ஸ் 195 போட்டிகளிலும் பங்கேற்றுள்ளனர். அவர்களின் இணைப்பாட்ட ஓட்டம் எல்லாப் போட்டிகளுக்குமாக 9ஆயிரமாகும். பெற்ற விக்கெட்டுக்கள் 382.

இவ்வணியில் டரில் டஃபி, ஜேம்ஸ் பிராங்லின் ஆகியோர் காயங்காரணமாக இணைக்கப்படவில்லை. டரில் டஃபி கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற மினி உலகக்கிண்ணப் போட்டிகளுக்குப்பின் சர்வதேச போட்டியில் பங்கெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## சிந்தனைக்கு

உழைப்பவனே பொருளுலகைப் படைக்கின்றான் ; மனிதவாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றான்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 25-11-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com


## முன்னெச்சரிக்கையாக...!

வடக்கில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக மக்கள் பெரும் நெருக்கடிக்கும், அபாயங்களுக்கும் உள்ளாகும் நிலை ஏற்பட்டு வருகின்றது. ஒரு புறத்தில் குடியிருப்புக்குள் வெள்ளம் புகுதல், குடியிருப்புக்களை வெள்ளம் சூழ்ந்து கொள்ளுதல் என்பனவும், மறுபுறத்தில், கிணற்றினுள் வெள்ளம் புகுதல், கழிவுப் பொருட்களை அள்ளிவரும் வெள்ளம், வீடுகளைச் சூழப் படியவிடுதல் போன்றவற்றாலும் இவ் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே, பெரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு, புனரமைப்புக்கான உதவிகள் கிடைக்கப்பெறாத நிலையில் சிறிய குடிசைகளிலும், இடிவுற்ற கட்டடங்களிலும் தங்கியுள்ள மக்களை இம்மழை வீழ்ச்சியும், வெள்ளமும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளன.

அதிலும் குறிப்பாகச் சிறிலங்கா இராணுவம் தனது பாதுகாப்பிற்கென் மேற்கொண்ட அரண்கள், இயற்கையான வடிகால் போக்கிற்கு மாறானவையாக அமைந்திருப்பதன் காரணமாக வெள்ளப்பெருக்கு, வெள்ளம் தேங்குதல் போன்றவை அதிகரித்த நிலையில், கடந்த காலங்களில் வெள்ள அபாயம் அற்றிருந்த பகுதிகள்கூட எதிர்பாராத வகையில் வெள்ள அபாயத்தில் சிக்கிக் கொண்டுள்ளன.

இந்நிலையில், மக்கள் தமது குடியிருப்புக்களைவிட்டு வெளியேறவும், பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. ஆகையினால் , இம்மக்களின் உணவுத் தேவைகள் உட்பட அத்தியாவசிய தேவைகள் கவனிக்கப்பட வேண்டியவை ஆகின்றன. அதிலும் குறிப்பாக, அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்திவரும் ஏழை மக்களுக்கான உதவிகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய காட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, வெள்ளத்தின் காரணமாக கிணற்றுக்குள் வெளி நீர் புகுதல், வெள்ளத்தால் அடித்துவரும் கழிவுப் பொருட்கள் வீட்டுச் சுற்றாடலில் படியவிடப்படுதல் போன்றவற்றால் மிக மோசமான சுகாதார சீர்கேடும் ஆபத்தானவையும், விரைவாகவும் பரவக் கூடியதானவையுமான தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன. குறிப்பாக, வயிற்றோட்டம், காய்ச்சல் போன்றவை பரவுவதற்கான சூழ்நிலை அதிகமாகும்.

இவ்வாறு பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கடினமானவையாகும். ஏனெனில், இத்தகைய சூழ்நிலையில் இந்நோய்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியில்தான் ஏற்படும், பரவும் என்பதற்கில்லை. ஒரே நேரத்தில் பரவலாகப் பல பகுதிகளிலும் பரவுவதற்கான சூழ்நிலையே அதிகம் காணப்பட வாய்ப்புண்டு.

ஆகையினால், எவ்வளவுதான் அக்கறை எடுத்துக்கொண்டாலும் நோய்த் தடுப்பு நடவடிக்கைக்கான இத்துறை சார்ந்தவர்கள் அனைத்துப் பகுதியிலும் மேற்கொள்ளுதல் என்பது கடினமானதொரு பணியாகவே இருக்கும். அதாவது, முழு அளவில் சாத்தியமாகக்கூடிய பணியாக இருக்கமாட்டாது. அத்தோடு, இப்பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்ற வளங்களும், வசதிகளும்கூட இருப்பதாக இல்லை.

ஆகையினால், மக்களே சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளில் முழுக் கவனத்துடன் செயற்பட வேண்டிய தேவையுள்ளது. அதாவது, சிறிலங்கா அரசிடமிருந்தோ பொது அமைப்புக்களிடம் இருந்தோ முழு சுகாதாரம் பேணுவதற்கான முழு அளவிலான ஒத்துழைப்போ அனுசரணையையோ கிடைக்கப்பெறுவதை எதிர்பார்த்துக் காத்திருக்க முடியாது. அவ்வாறு கிடைப்பதற்கான வாய்ப்பும் இல்லை.

தமிழ் மக்களைப் பொறுத்து அதிலும் குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களைப் பொறுத்து கடந்த காலத்தில் இது போன்ற வேறு நெருக்கடிகள் ஏற்பட்டபோது அவை வெற்றிகரமாக எதிர்கொள்ளப்பட்டதுண்டு. குறிப்பாகப் பொருளாதாரத் தடை, மருந்துத் தடை என்பன அமுலில் இருந்த யுத்த காலத்தில் சில தொற்று நோய்கள் அடையாளம் காணப்பட்டவையாயினும் அவை பரவாது வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டதுண்டு. இவ்வாறு பரவாது தடுக்கப்பட்டத்தில் பொதுமக்களின் பங்களிப்பும் மிக உயர்வானதாகவே இருந்தது.

ஆகையினால், தற்பொழுதும் போர்க்கால நெருக்கடியைப் போன்றதானதொரு சூழ்நிலையை மனதில் கொண்டு தொடர் மழையினால் ஏற்படக் கூடிய வெள்ள அனர்த்தத்தினால் ஏற்படக் கூடிய சுகாதார சீர் கேடுகளையும், தொற்று நோய் பரவுதலையும் தடுக்க மக்கள் விழிப்புடன் செயற்படுதல் அவசியமானதாகும்.

இவற்றிற்கான நடவடிக்கையாக வெள்ள நீர் கிணற்றுக்குள் புகுந்துவிடாதவாறு கிணற்றைப் பாதுகாத்தல், கொதிக்க வைத்து ஆறிய நீரை மட்டும் பருகுதல், வளவுகளில் தேங்கி நிற்கும் நீரையும், வெள்ளத்தால் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட கழிவுப் பொருட்களையும் அகற்றுதல் போன்ற பணிகளை விரைந்து மேற்கொள்ளுதல் வேண்டும். இவை மட்டும் முழு அளவிலான சுகாதாரம் பேணும் நடவடிக்கையாக இல்லாதுவிடினும், முன்னோடி நடவடிக்கையாக நிச்சயம் இருக்கும். பெரும் அவலங்களில் இருந்து காப்பதற்கு வாய்ப்பளிப்பவையாகவும் இருக்கும்.

## தமிழீழ மாவீரர் நாள்–2004

# தமிழீழ தேசியக் கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகும்.மாவீரர் நாள் தொடக்க நிகழ்வுகள்.

01. பொதுச்சுடரேற்றல்
02. தேசியக் கொடி ஏற்றல்
03. ஈகச்சுடரேற்றல், (திருவுருவப்படம்)
04. மலர் வணக்கம்
05. அகவணக்கம்
06. உறுதியுரை எடுத்தல்
07. நினைவுரை

என்பன வரிசை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும். ஆரம்ப நிகழ்வுகள் மாவீரர் எழுச்சி நாட்களான மூன்று நாட்களிலும் நடைபெறும்.

### தேசியக் கொடியேற்றல்

மாவீரர் எழுச்சி நாட்களுக்கான நிகழ்வுகள் நவம்பர் 25ஆம் நாளன்று காலை 8.00 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும்.

மாவீரர் துயிலுமில்லங்களில் 25ஆம் நாள் காலை 8.00 மணிக்கு ஏற்றப்படும் தேசியக் கொடி, நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும். இயக்கப் பணிமனைகள், தளங்களில் முதல் இரண்டு நாட்களிலும் மாலை 6.00 மணிக்கு கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலை ஏற்றப்படும். நவம்பர் 27ஆம் நாள் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

பொது நிறுவனங்களிலும், பள்ளிகளிலும், ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின். பகல் 12.01 மணிக்கு பின்பாகவும் மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக்கொடி இறக்கப்பட்டு மறு நாள் காலையில் ஏற்றப்பட வேண்டும். தேசியக் கொடி ஏற்றுதல், இறக்குதல் தொடர்பான கூடுதலான விளக்கங்கள் தேசியக் கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்னும் நூலில் கொடுக்கப் பட்டுள்ளது.

தமிழீழ மாவீரர் பணிமனை.

# ஆறுமணி நேர வரவு செலவுத்திட்ட உரையில் அமைச்சர் சமாதானம் பற்றி எதுவும் கூறவில்லை

### ரவிராஜ். பா.உ பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வரவு செலவுத்திட்டத்தை சமர்பித்து 6 மணித்தியாலங்களாக உரையாற்றிய நிதியமைச்சர் சரத் அமுனுகம சமாதானம் தொடர்பாக எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்காமை குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் முன்னறிவித்தலின்றி இலங்கைக்கு சுமார் 90 மில்லியன் ரூபா பெறுமதியான இராணுவ உபகரணங்களை பாகிஸ்தானிய அரசாங்கம் வழங்கியுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்துள்ளார். நேற்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர், பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கியதன் மூலம், இலங்கையில் யுத்தம் ஒன்று ஏற்படுமானால் யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களும் பலியாவர் என்பதை பாகிஸ்தான் அறிந்திருக்க வேண்டியது அவசியம் என குறிப்பிட்டார்

யுத்தம் ஒன்றை மேற்கொள்ளும வகையில் சனாதிபதி பல்வேறு நாடுகளுடன் ஆயுதங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தினார்.வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அபராதத்தொகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதை போன்று கட்சி மாறும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அபராதத் தொகைகள் அறவிடப்படவேண்டும் எனக் கேட்டுகொண்டார். தமிழ் பேசுகின்ற சில பாராளுமன்ற உறுப்பி னர்கள் அண்மைக் காலமாக பெரும்பான்மையினரிடம் இருந்து சில சலுகைகளை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்துடன் இணைந்துக்கொண்டதன் மூலம், அரசாங்கத்தின் தமிழர்களுக்கு எதிரான நாச வேலைகளுக்கு துணைபோயுள்ளன. வரவு செலவுத்திட்டத்தில் பௌத்த மதத்திற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்து இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களுக்கு எவ்வித ஒதுக்கீடுகளும செய்யப்படவில்லை. நாட்டில் சமாதான முன்னெடுப்புகளை மேற்கொள்ளாமல், அரசாங்கம் எதிர்பார்க்கும் எந்த ஒரு அபிவிருத்தியையும் அடைய முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்தார்

32 பேர் மாத்திரமே அமைச்சர்களாக இருக்க வேண்டும் என வலியுறுத்திய ஜே. வி .பி இன்று அமைச்சர்களின் தொகை 84 ஆக உயர்ந்துள்ளமையை கண்டு கொள்ளவில்லை இதேவேளை அரசாங்கம் ஈழமக்கள் ஜனநாயக கட்சியான ஈ. பி. டி. பிக்கு அரச வானொலியில் ஒரு மணித்தியாலம் ஒதுக்கியுள்ளமை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.எனக் குறிப்பிட்ட அவர் பண்டாரநாயக்க ஆரம்பித்து வைத்த இனப்பிரச்சினையை அவரின் மனைவி தொடர்ந்து கொண்டு சென்று பின்னர் அதனை மகளும் தொடர்ந்துகொண்டிருக்கிறார் எதிர்காலத்தில் பண்டாரநாயக்கவின் புத்திரரும இதனை தொடருவதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதாக வும் குற்றம் சுமத்தினார். (32)

# அரச சமாதான செயலக செயலர் வவுனியாவுக்கு நேற்று வருகை

(செட்டி குளம்)

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாது நிச்சயமாக சமாதானம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முழு நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு இலங்கை அரசாங்கத்தின் சமாதான செயலகத்தின் தலைவர் ஜயந்த தனபால தெரிவித்ததாக மக்கள் பிரதிநிதிகள் சார்பில் ஜெ.பி. கிரிஸ்தோப்பர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சமாதான செயலகத்தின் செயலாளர் ஜெயந்த தனபால நேற்று வவுனியாவுக்கு வந்தார். வவுனியாவுக்கு வந்த அவர் இராணுவத்தினர், அரச அதிபர், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், பூந்தோட்ட நலன்புரி மக்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார். காலை 9.45 வந்த ஜயந்த தனபால வன்னி இராணுவ தலைமையகத்தில் இராணுவ தளபதி பாரமி குலதுங்க அடங்கிய குழுவினரைச் சந்தித்து பாதுகாப்பு நிலமைகள் தொடர்பாக ஆராய்ந்தனர். இதன் பின்னர் வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு காரியாலயத்தில் தற்போது வவுனியாவில் உள்ள நிலமைகள் தொடர்பாக டி.ஆர். சொனபி தலைமையிலான குழுவினருடன் ஆராய்ந்தார். இதன் பின்னர் ஓமந்தைப் பகுதிக்குச் சென்று பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னர் அப்பகுதியின் முன்னரங்க காவல் நிலைகள் தொடர்பாகவும் ஆராய்ந்தார். பின்னர் அப்பகுதியில் பிரயாணத்தில் ஈடுபட்டு இருந்த மக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். இதன் பின்னர் வவுனியா அரச அதிபர் காரியாலயத்தில் அரச அதிபர் கே. கணேசைச் சந்தித்து வவுனியாவில் உள்ள பிரச்சினைகள் பாதுகாப்பு நிலவரங்கள் போர் நிறுத்தம் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தனர். இந்தச் சந்திப்பை முடித்து கொண்டு கிராம அபிவிருத்தி நிறுவனத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினால் சகல கூட்டங்களுக்கும் பத்திரிகையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. சிவில் அமைப்புக்களுடன் சந்திப்பு முடிந்த பின்னர் சிறிது நேரம் தனது விஜயம் தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளித்தார். ஆனால் பத்திரிகையாளர் எவரின் கேள்விகளும் பதிலளிக்கப்படவில்லை.

இதேவேளை மன்னாருக்கு இவர் இன்று காலை சென்று மன்னார் அரச அதிபர், படையுயர் அதிகாரிகள், உள்ளூர் தொண்டர் நிறுவனப்பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து சமாதான நிலமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவார். பின்னர் உயிலங்குளம் இராணுவ சோதனைச் சாவடிக்கும் இவர் செல்லவுள்ளதாகத் தெரிய வருகிறது. (21,10)

# தேசிய தகவல் தொழில்நுட்பவாரம் 29ஆம் திகதி ஆரம்பமாகிறது

இலங்கையில் வரும் 29 ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை தேசிய தகவல் தொழில்நுட்பவாரம் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இலங்கைத் தகவல் தொழில் நுட்ப மையத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.மு சமரநாயக்க தெரிவித்துள்ளார். இதே காலப்பகுதியில் தகவல் தொழில் நுட்பம் குறித்த இரண்டு சர்வதேச மகாநாடு இலங்கையில் இடம்பெறவிருப்பதாக தெரிவித்த அவர் இத்துறையை அபிவிருத்தி செய்யும் தொடர்ச்சியில் இலங்கைக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் எனவும் தெரிவித்துள்ளார்.- - (32)

# புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

புதுக்குடியிருப்பு கொக்குளாய் பாடசாலையில் நேற்றுக்காலை 10.30மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு புதுக்குடியிருப்பு முள்ளியவளை கோட்டப் பொறுப்பாளர் பிறையாளன் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் பொதுச்சுடரினை இராமசாமி குருக்கள் அவர்கள் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஏற்றி வைத்தார். தொடர்ந்து லெப்ரினட் சங்கரின் உருவப் படத்திற்குச் சுடரினை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா ஏற்றி வைக்க, மலர் மாலையை தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த சாந்தன் அணிவித்தார். தொடர்ந்து 2ஆம் லெப்ரினட் மாலதியின் திருவுருவப்படத்திற்கான சுடரை தமிழீழ மாவீர் பணிமனை நிர்வாகப் பொறுபபாளர் இனியவன் ஏற்றிவைக்க மலர்மாலையை பெண்கள் புனர்வாழ்வு நிறுவனப் புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் வான்மதி அணிவித்தார். தொடர்ந்து வரவேற்புரையை மல்லிகைதீவு கிராம அலுவலர் கந்தசாமி நிகழ்த்தினார். இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட ஊடகப் பேச்சாளர் வேதவனம், புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கனகசுந்தரசுவாமி, தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகியோர் ஆற்றினர். தொடர்ந்து சிறப்புரையைக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஆற்றினார். தொடர்ந்து இந்நிகழ்வில் கலந்துகொண்ட போராளிகள், தளபதிகள், மாவீரர்களின் பெற்றோருடன் கருத்துரைகளைப் பரிமாறிக்கொண்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வலய ரீதியாக மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நடைபெற்றது.

கடந்த 22ஆம் திகதி காலை 11.00 மணியளவில் கற்சிலை மடு அ.த.க.பாடசாலையில் கோட்டப் பொறுப்பாளர் ஈழவன் தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புக் கருத்துரைகளை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் முல்லை மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் வழங்கினா. (08,05)



# தேசியத் தலைவரின் பிறந்தநாளையொட்டி யாழ்.இல் மூக்குக்கண்ணாடி வழங்கல்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் பெரியகடை கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் தேசியத்தலைவரின் 50 ஆவது பிறந்த நாளையொட்டி இன்று காலை 10.00 மணிக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

லயன்ஸ்கழகத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் இச் செயற்பாடானது தனியார் கல்வி நிறுவனமான சயன்ஸ் மண்டபத்தில் மாதர் சங்கத் தலைவி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறையைச் சேர்ந்தவர்கள் உட்பட பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (41)

### -கோஸ்வேயூடாக வெள்ளம் பாய்வதால்-

# புளியம்பொக்கணைச் சந்தியருகே போக்குவரத்துத் துண்டிப்பு

பரந்தன்-புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் புளியம் பொக்கணைச் சந்திக்கு அருகில் உள்ள வீதிக்கு குறுக்காக உள்ள 'கோஸ்வே' ஊடாக பெருமளவான மழை நீர் பாய்வதால் அதனூடான போக்குவரத்தில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ள நீர் மூன்றுஅடிக்கும் மேலாக பாய்கிறது. வீதியில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளது. இதனால் இதனூடான வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பயணிகள் பெரும் அசௌகரியங்களின் மத்தியில் இடுப்பளவு நீரில்நடந்து மறு கரையை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு செல்லுகின்ற பயணிகளை தமிழீழ காவல்துறை உறுப்பினர்கள், போராளிகள், உள்ளூர் தொண்டு நிறுவன உறுப்பினர்கள் ஆகியோர் வெள்ளத்தைக் கடந்து செல்வதற்கான உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலைகாரணமாக பேருந்துகள் மற்றும் வாகனங்கள் தொடர்ந்து பயணிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



தருமபுரம் வைத்திய சாலைக்குரிய அம்பியூலன்ஸ் வண்டி முதல் பலதரப்பட்ட வாகனங்களும் வெள்ளத்தைக் கடந்து செல்ல முடியாமையால் இரண்டு பக்க வீதிகளிலும் ஊர்திகள் தரித்து நிறுத்தப்பட்டுள்ளன. (லோ,கு)

# இறுவெட்டு வெளியீட்டு விழா

தமிழீழ விளையாட்டுத்துறை வெளியீடுகளான சஞ்சிகை, இறுவெட்டு ஆகியவற்றின் வெளியீட்டு விழா வவுனியாவில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத் துறையின் வெளியீடுகளான 50 ஆவது அகவையில் தேசியத் தலைவரின் சிந்தனையில் தமிழீழ விளையாட்டுத்துறை என்ற சஞ்சிகையும், உதைபந்தாட்ட பயிற்சி தமிழ் மொழியாக்கம் என்ற இறுவெட்டும், சென்சி.லீ.சிமித்தின் தமிழீழ வருகை என்ற கராத்தே இறுவெட்டும் தமிழீழ விளையாட்டுத் துறையினரால் வெளியிடப்பட்டுள்ளன. வவுனியா முத்தையா மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இவ் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது. (10)

## கடும்...

வனங்கள்,பள்ளிகள், இயக்கப் பணிமனைகள், தளங்கள் ஆகிய இடங்களில் இந் நிகழ்வுகளுக்கென ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையங்கள், வீதிகள் கேந்திர நிலையங்கள் என்பன சிவப்பு மஞ்சல் கொடிகளாலும் பல இடங்களில் வர்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் அலங்கார வளைவுகள் பதாகைகள் கட்டப்பட்டுள்துடன். பந்தல்கள் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு மாவீரர் திருவுருவப்படங்கள் வைக்கப் பட்டுள்ளன. முக்கியஇடங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் மாவீரர் புகழ்பாடும் எழுச்சி கானங்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. இவ் ஏற்பாடுகளில் முன்னரே ஆரம்பிக்கப்பட்டு விட்டபோதிலும் நேற்று முழுவதும் துரிதமாக நடைபெற்றது.

## மக்களை..

ஒழுங்கமைப்புகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு நேற்றுக்காலை வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதிக்கு மாவீரர் நாள் எழுச்சி ஒழுங்கமைப்பை மேற்க்கொள்ளச் சென்ற கடற்புலிகளின் அரசியல் போராளி கங்கையழகனும் ஆதரவாளர் ஒருவரும் முள்ளிச் சந்தியில் உள்ள இராணுவம் மற்றும் பொலிசாரால் வழிமறிக்கப்பட்டு குடத்தனை செல்ல அனுமதி மறுக்கப்பட்டதும் தாம் போராளி என அவர்கள் தம்மை அடையாளப்படுத்தியும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தாலே செல்ல அனுமதிக்க முடியுமென உந்துருளியைச் சுற்றிவளைத்தனர். ஆனால் போராளியும் ஆதரவாளரும் பெரும் வாதாட்டத்தின் பின்னர், குடத்தனைக்குச் சென்று கொண்டிருந்த போது மீண்டும் குடத்தனைச் சந்தியில் இதே போன்ற பிரச்சினையை இராணுவத்தினரும் பொலிசாரும் திட்டமிட்டே நடத்தியுள்ளனர். ஆனாலும் போராளி கங்கையழகனும் ஆதரவாளரும் தமது திட்டமிட்ட வேலைகளை நிறைவு செய்து திரும்பியுள்ளனர். (கா)

## மன்னாரில்..

கொடியை இராணுவத்தினரை இறக்க விடாமல் தடுத்தனர்.

இதன்போது இராணுவத்தினர் அவர்களை அடித்து விரட்டி தேசியக்கொடியை அறுத்துக் கொண்டு சென்றனர்.

இதற்கு முன்னர் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அங்குவந்து அரை மணி நேரத்தினுள் தேசியக் கொடியை அகற்ற வேண்டுமென இராணுவம் கூறியதாகக் கூறினார்கள். இதனாலேயே மக்கள் கொடியை இறக்கவிடாமல் தடுத்தனர்.

இராணுவத்தினரின் இச்செயலால் ஆத்திரமுற்ற பொதுமக்கள் இராணுவத்தினருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். ஆத்திரமுற்ற மக்கள் இராணுவத்தினரின் வாகனங்கள் மீது கற்களை வீசினார்கள்.

இதன்போது மன்னார் நகரசபை மண்டபத்தில் ஏற்றப்பட்டிருந்த தமிழீழ தேசியக்கொடியை அகற்றிக்கொண்டு சென்றுகொண்டிருந்த மேஜர்தர அதிகாரியொருவரின் பிக்கப் ரக வாகனம் கல்வீச்சுக்கு இலக்கானது. இதனால் அதன் முன் கண்ணாடி முற்றாக உடைந்து தூளானது.

இதன்போது வீதிகளின் முக்கிய சந்திகளில் ரயர்களைப் போட்டு எரித்தும், சாலை மறியலில் ஈடுபட்டும் போக்குவரத்தைத் தடைசெய்தனர். இதேவேளை மன்னார் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தைப் பெருமளவு மக்கள் முற்றுகையிட்டு புனிதமான தமிழீழ தேசியக் கொடியை அகற்றி எடுத்துச்சென்றமை தவறு என்றும், மாவீரர்கள் மிகவும் போற்றி மதிக்கப்படவேண்டிய புனிதமானவர்கள். இந்நிகழ்வைக் குழப்புவதற்கு இராணுவம் திட்டமிட்டுச் செய்த சதிவேலையே இது எனவும், தமக்கு தமது தேசியக்கொடியை திருப்பித் தரப்பட வேண்டும் எனவும் அதுவும் தேசியக்கொடி இறக்கப்பட்ட இடங்களுக்கு உயர்அதிகாரிகள் கொண்டுவந்த தேசியக்கொடியைத் தரவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இச்சமயம் மன்னார், ஆயர் இராயப்பு ஜோசெப், குருமுதல்வர், வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வினோ மன்னார் தள்ளாடி முகாம் தளபதி சரத் பெர்ணாண்டோ, பொலிஸ அத்தியட்சகர் தென்னக்கோன், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் மற்றும் பல உயரதிகாரிகள் வெகுஜன ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் ஒன்றுகூடி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தமது கோரிக்கையைத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர் சரத் பெர்னாண்டோ மன்னார் நகருக்கு வந்து மன்னார் ஆயர் இராயப்பு ஜோசெப் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னிலையில் மன்னாரில் முன்னாள் தளபதி மாவீரன் லெப்ரினன்ட் கேணல் விக்ரரின் 'தந்தையார் மருசிலீன் அவர்களிடம் தமிழீழ தேசியக் கொடி கையளிக்கப்பட்டது. இதேவேளை மன்னார் விளையாட்டரங்கில் அகற்றப்பட்ட தமிழீழ தேசியக் கொடியை மன்னார் வலயத்திற்குப் பொறுப்பான இராணுவ மேஜர் ஒருவரால் திருப்பிக்கொடுக்கப் பட்டது.

மேற்படி கொடிகள் இன்று விழா ஆரம்பிக்கும் சமயம் மீண்டும ஏற்றப்படும் எனவும் விழா அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## வந்தாறு..

அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் ரி 56 ரக துப்பாக்கியினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இருவரது சடலங்களும் தற்போது செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

## வீர வணக்கம்

### 3 ஆம் ஆண்டு நினைவலைகளில்

பிறப்பு 26 - 04 - 1984



வீரச்சாவு 25 - 11 - 2001

**தமிழீழ தேசியத்துணைப்படை வீரர் துரைசிங்கம்**

**சிவனேசன் துரைசிங்கம்**
**வைரவர் கோவிலடி, 10 ஆம் வாய்க்கால்**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**

25. 11. 2001 அன்று ஓமந்தைப் பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழீழ காவல்துறையின் சிறப்புப்படையணியினர்

(5307)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


வீரவேங்கை - ஆழியமுது
ஆனந்தராசா - சுகி
பிறப்பு - 01.06.1983
வீரச்சாவு - 01.02.2001
கடற்புலி கப்டன் - இளங்கதிர்
தனபாலசிங்கம் - ஜெகதீஸ்
பிறப்பு - 17.11.1978
வீரச்சாவு - 30.10.1998
லெப் - கேசவன்
திருநாமம் - தேவறஞ்சன்
பிறப்பு - 10.05.1976
வீரச்சாவு - 28.11.1995
2ஆம் லெப் - மாக்கிறட்
சிற்றம்பலம் - சாந்தினி
பிறப்பு - 17.02.1971
வீரச்சாவு - 14.07.1991
லெப் - உருத்திரன்
சின்னத்தம்பி - நாகேஸ்வரன்
பிறப்பு - 14.11.1974
வீரச்சாவு - 13.06.1999
2ஆம் லெப் - எலிசபெத்
சிறீஸ்கந்தராசா - சிறிரஞ்சினி
பிறப்பு - 27.03.1971
வீரச்சாவு - 27.08.1990
லெப் கேணல் - காவியா
சிவபாலு - உதயா
பிறப்பு - 29.04.1974
வீரச்சாவு - 19.01.2001
கடற்புலி - மேஜர் - தேவன்
சந்திரசேகரம் - சிறீபவன்
பிறப்பு - 15.12.1979
வீரச்சாவு - 23.10.2000
மண்ணுக்காக வித்தான மாவீரர்கள் நினைவில்...
கப்டன் - பில்லா
கிருஷ்ணபிள்ளை சிவஞானம்
பிறப்பு - 13.05.1974
வீரச்சாவு - 22.07.1991
கடற்புலி வீரவேங்கை - கலையரசி
ஜெயகுலசிங்கம் - கௌசலா
பிறப்பு - 05.11.1980
வீரச்சாவு - 18.07.1997
கடற்புலி மேஜர் - மோகன்
சிவபாலு - பாஸ்கரன்
பிறப்பு - 21.12.1968
வீரச்சாவு - 30.03.1996
லெப் சுடர்வாணன்
கிருஷ்ணபிள்ளை சிவநேசன்
பிறப்பு - 10.07.1978
வீரச்சாவு - 02.02.1998
கப்டன் - டானி
சின்னத்துரை - வசந்தகுமார்
பிறப்பு - 27.05.1971
வீரச்சாவு - 22.09.1991
வீரவேங்கை - யூட்டி
இராசரத்தினம் - ஜெயதேவி
பிறப்பு - 25.04.1966
வீரச்சாவு - 14.09.1991
வீரவேங்கை - புவியரசி
ஜெயபாலு - ஜெயப்பிரியா
பிறப்பு - 14.02.1981
வீரச்சாவு - 10.03.1999
வீரவேங்கை - ஜீவன்
ஐயாமுத்து - உதயகுமார்
பிறப்பு - 24.04.1972
வீரச்சாவு - 18.09.1989
கப்டன் - லக்ஷி
முத்துலிங்கம் - தங்கறஜனி
பிறப்பு - 10.10.1973
வீரச்சாவு - 05.08.1991
வேம்படி வாழ் மக்கள்
வடமராட்சி கிழக்கு.